WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்



# AKARAM
# அகரம்

14. மாசி - 13. பங்குனி 2012

சுவடி: 10 திருவள்ளுவர் ஆண்டு 2042 கர வருடம்




## ...ஆதலால் காதல் செய்வோம்!...

FREE Magazine

FREE CIRCULATION:
Germany, Switzerland, France, England, Denmark, Norway, Holland, Sweden, Italy, Canada

புதிய லைக்காமொபைல் ப்ள்ஸ் சிம்முடன்!

# Lycamobile

## சுவிட்சர்லாந்து

CHF 100.- வரை இலவசம்!

## சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

இந்தியா
கனடா
அமெரிக்கா

**CHF 0.01 /min**
வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

Lycamobile ப்ள்ஸ் இல் இருந்து Lycamobile ப்ள்ஸ் க்கு
**CHF 0* /min**

சிங்கப்பூர்
மலேசியா

**CHF 0 /min**
வீட்டுத் தொலைபேசி



| | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | CHF 0.09 /min | CHF 0.12 /min |
| ஐரோப்பா | CHF 0.01 /min | |

(ஐரோப்பா: வீட்டுத் தொலைபேசி)

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19Rp களில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19Rp என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை. *உள் நாடு மற்றும் வெளி நாடு இணைப்புக்கட்டணம் CHF 0.19

மேலதிக விபரங்களுக்கு
**www.lycamobile.ch** 077 900 01 22
044 555 23 23

**Lycamobile**
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:
SBB CFF FFS · Media Markt · Inter Discount · k kiosk · SWISS POST · COOP · Fust · TELEFONCORNER · NAVILLE · Press&books · RELAY

# SHELVAZUG
## செல்வாசுக்

★★★★

KREDIT+IMMOBILIEN+VERSICHERUNGEN

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

TEL : 041 790 64 63 FAX : 041 790 64 68 NAT : 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

ZG ZH AG LU BS BL BE SO FR CH TI GE OW
AR JU VD AL GL NE UR VS SH NW SG SZ TG




- ★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)
- ★ வீட்டுக்கடன் (1.5% இலிருந்து)
- ★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)
- ★ வாகனங்கள் (வாங்க அல்லது விற்க்க)
- ★ ஆயுட் காப்புறுதி
- ★ மருத்துவக் காப்புறுதி
- ★ வீட்டுக்காப்புறுதி
- ★ நிறுவனங்களிற்கான காப்புறுதி
- ★ கட்டிய வீட்டை வாங்க அல்லது வாடகைக்குப்பெற
- ★ புதிதாக வீடு கட்ட
- ★ வீடுகளைத் திருத்திக்கொள்ள





tMedia Network
நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

14. மாசி - 13. பங்குனி | 14. Feb. - 13. Mar. 2012
சுவடு 10 | Issue 10

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. ஆதவன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)
திரு. அனலை நிதிஸ் ச. குமாரன் (கனடா)

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)

தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556

Email: editor@akaram.eu

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,


உங்கள் ஆதரவாலும் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையாலும் அகரம் வெற்றி நடை போட முடிகிறது. மேலும் தொடர உங்களின் கரங்களைப் பாசத்தோடு இறுகப் பற்றிக் கொள்கிறோம். எம்மக்களை எதிர்நோக்கும் இன்னல்களோ நாளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அவற்றை முழுமையாகத் தெரிந்தும் புரிந்தும் கொள்பவர் மிகமிகச் சிலரே. அப்படியானவரிலும் மக்களின் நலன் கருதி சேவை செய்து வாழ்பவர் அரிதினும் அரிதே.

அப்படியான ஓர் அரிய பெருமகனார் அமரர் திரு.வ.நவரத்தினம் அவர்களை அகரம் வாசகருக்கு நினைவூட்ட விரும்புகிறது. நேர்மையான அரசியல் வாதியைக் கழுவேற்றிக் கொன்றவர் வேறு யாரும் அல்ல. அவரோடு கட்சியில் கூட இருந்தவர்களே. மற்றவர்போல் மக்களின் கை தட்டலுக்கும் இரத்தத் திலகத்துக்கும் அரசியல் நடத்தாதவர். அதனால் வெகு இலகுவில் பலியாக்கப் பட்டார். அவரது தேர்தல் தோல்வியை வைத்தே தனித் தமிழீழம் தமிழ் மக்களால் நிராகரிக்கப் பட்டது என நாக்கூசாது பேசும் தலைவர்களை தமிழினம் இன்றும் தன்னுள்ளே கொண்டுள்ளது சாபக்கேடுதான்.

அவர் பற்றிய கட்டுரை உங்களின் வரவேற்பைப் பெறும் என நம்புகிறோம். ஏனென்றால் அவர் ஒருவர்தான் தன்னிச்சையான தமிழீழப் பிரகடனம் காலந்தவறிப் போகிறது எனவும் பிரபாகரனும் சிங்களவரால் ஏமாற்றப்படலாம் எனவும் 2005லேயே கூறியவர். அப்படிப் பிரகடனப் படுத்தியிருந்தால் இன்று உலகம் தமிழருக்கு ஒற்றையாட்சித் தீர்வுதான் முடிவு எனப் பேசும் நிலை ஏற்பட்டிருக்காது.

இந்திய அரசின் ஆதரவு இல்லாமல் நாம் எமது இலட்சியத்தை அடைய முடியாது எனப் பலரும் எம்மை பயமுறுத்துகிறார்கள். அதற்காக இந்தியாவும், இலங்கையும், ஏனைய வெளிநாடுகளும் எமக்குப் போட முனையும் காலணிக்கு அளவாக நாம் எமது பாதங்களை வெட்டிக் குறுக்கிக் கொள்ள முடியாது. எமது பாதங்களுக்கு அளவான பாதணியைத் தெரிவு செய்யும் உரிமையை

அகரம்



FREE MAGAZINE:
GERMANY, SWISS, FRANCE, ENGLAND
NORWAY, DENMARK, SWEDEN,
HOLLAND, ITALY, CANADA

நாம் எவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது.

எனவே மற்றவரை எமது வழிக்கு இழுக்க வேண்டிய தேவையும் உரிமையும் எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இந்தியா உலக வரைபடத்தில் 1947ம் ஆண்டுதான் உருவானது. அவர்களின் இறையாண்மையும் ஆகஸ்ட் 15, 1947ல்தான் பிறந்தது. ஆனால் தமிழீழத்தின் ஆட்சியும் அரசும் கொடியும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முந்தையது.

400 வருட கால வரலாறு உள்ள அமெரிக்கா இறையாண்மை பேசி உலகின் வல்லரசு என அதிகாரம் செலுத்துகிறது. ஆனால் எமது இறையாண்மையை மறுதலிக்கிறது. ஸ்ரீலங்காவின் இறையாண்மையோ 1972ல்தான் உதயமாகிறது. அதனால் அதற்கு முந்தைய வரலாற்றைக் கூற முற்பட்டால் தமிழினத்தை தவிர்த்து அதனால் பேச முடியாது. இதுதான் வரலாற்று உண்மையும் கூட.

எனவே எக்காரணம் கொண்டும் வெளியாரின் நெருக்குதலுக்கும் சிங்களத்தின் விருப்பத்துக்கும் எமது பூர்வீகத் தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது, முடியாது. தனித் தமிழீழம் ஒன்றே ஒவ்வொரு தமிழனின் தாரக மந்திரமாக இருக்கட்டும். தமிழீழத்தை மீட்பது ஒன்றே தமிழினத்தின் இலட்சியமாக இருக்கட்டும்.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
அகரம் குழுமம்!...


**உங்கள் விளம்பரங்களை பதிவுசெய்ய:**
**Mobile: 00 49 1 51 11 55 78 90**

இலவச தமிழ் மாத இதழ்


## சிறப்புப் பகுதிகள் - Features



10
**மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் சிறி லங்காவுக்கு ஆபத்து?**




22
**ஜெனிவாவில் உருவாகும் நெருக்கடியும் அமெரிக்காவின் காய் நகர்த்தல்களும்.**




28
**இந்த ஆண்டில் இசை**




60
**அச்சுவேலி**

# தமிழருக்காய் நீவீர் எரிந்தது தவறு...!



ஓரிரண்டு நாட்களோடு
உங்களைப் பற்றிய கூக்குரல்
ஒடுங்கியே விட்டது.

நீவிர் எழுதிவைத்துவிட்டுப்போன கடிதம்
நிச்சயமாய் இங்கேதான் எங்கோ..!!

உமதருமைப் பெற்றோர் நிலை என்னவென்று
ஒன்றும் தெரியாது,

ஆனாலும்;
ஆண்டுக்கு ஓர் முறை
அச்சடிக்கத் தவறியதில்லை
உங்கள் புகைப்படத்தை...,

காதல்தோல்வியில் முத்துக்குமார் கருகிப்போனதாக
கருணாநிதி சொன்னார்.
ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள
அன்று வழியிருக்கவில்லை அவருக்கு

நாமும் அப்படித்தான்...!
விடுதலை விரும்பிகள் என்று
வெளியில் மார்தட்டிக்கொள்வதற்காய்,
உமைப்பற்றிப் பற்றிப்பேசி
ஒருதுளி கண்ணீர் விட்டு
நிறைவு செய்துகொள்கிறோம்
நினைவு வணக்கத்தை..!

இல்லாவிடில்...,
வெளிறிவிடுமல்லவா எமது
வெளிச்சாயம்...!

"ஒரு நிமிடம் யோசியுங்கள்" என்று
உருகி நீவிர் எழுதிப்போக...,

யோசித்தோம்,
அந்த ஒருநிமிடம் மட்டும்..!
உடலை வைத்துப் போராடினோம்
அந்த ஒருநாள் மட்டும்...!

நினைவிற்காய் மட்டுமா நீவிர்
நெருப்பாகிப் போனீர்..?
சேதிக்காய் மட்டுமா நீவிர்
சிதையாகிப்போனீர்...?

வாய்ப்பேச்சில் மட்டுமே
வக்கிரம் தீர்க்கும் எமக்கு
நீரெல்லாம் வெறும்
நினைப்பு மட்டுமே..!

எரியத்தான் நம்மால் முடியவில்லை - பகையை
எதிர்த்துப் பேசவுமா எவரும் இல்லை...?

உங்கள்பின்னே
ஒரு புரட்சி வெடிக்கும் என்று
உள் மனதுக்குள் நீவிர் மகிழ்ந்திருப்பீர்.
ஐயோ பாவம் நீவிர்...

புரட்சி செய்வதற்காய்க் கூட
போட்டி நடக்கிறது நம்முள்.

நீவிர் சிந்தித்ததில் பாதி
நாம் சிந்தித்திருந்தால்
ஈழத்தின் பாதி
இன்று பிறந்திருக்கும்.

எம்மைத்திரட்டி
எதிரியோடு போராட
நெருப்பானீர் நீவிர்..!

நாமோ இன்னமும்
நமக்குள் மோதியபடி..!!!

விடுதலைக்காய் வீழும் எல்லோரையும்
நினைப்பதோடு அடங்கிவிடும் - எம்
விடுதலைத்தாகம்.
அன்றிருந்து இன்றுவரை - அதுவே
தமிழர்களின் வேஷம்...!

மன்னித்துவிடுங்கள் சோதரர்களே..!
நீவிர் நினைத்ததையும்
உங்கள் அவாவையும்
ஒரு போதும் நாங்கள்
உய்விக்க மாட்டோம்..!

ஈழத்தமிழனுக்காய்
எரிந்துபோனது
வாழ்வில்நீவிர் செய்த
வரலாற்றுத்தவறு...!

மீண்டும் பிறவாதீர்
பிறந்தால் எரியாதீர்..!
வேஷம் போடும் நாமெல்லாம்
வீழ்ந்து சாம்பலாகும் வரை...!

-தேவன்-



# அணுவிஞ்ஞானி அப்துல் கலாம்!

த. எதிர்மன்னசிங்கம்

விஞ்ஞானிகள் என்றாலே அவர்கள் இந்த உலகத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட உலகில் வாழ்பவர்கள். இதற்கு இதுவரை உதாரணமாகத் திகழ்ந்து வந்தவர் ஆயிரம் வரையான கண்டு பிடிப்புகளை செய்தவரான தோமஸ் அல்வா எடிசனைச் சொல்வார்கள்.

எடிசனின் வளர்ப்புப் பூனை, குட்டி போட்டதால் தமது அறைக்குள் அது வந்து போக அதற்கென ஒரு சிறிய வழியை உருவாக்கி வைத்தாராம். தாய்ப் பூனை வந்து போகும் வழியால் குட்டிப் பூனையும் வந்து போகும் என்ற நினைப்பே அந்த விஞ்ஞான மூளைக்கு எட்டவில்லை என்பது அக்கதையின் கருத்து.

அந்தக் கதை உண்மையோ இல்லையோ இன்று இந்திய அணுவிஞ்ஞானி அப்துல் கலாமின் செயற்பாடுகள் எடிசனின் செயலைப் போன்று இருப்பதை நாம் காண முடிகிறது. இந்திய ஜனாதிபதி நியமனம் பெற்ற போது அது விதியோ விபத்தோ என நினைக்கும் அளவுக்கு அவரது செயற்பாடுகள் இருந்தன. அவரால் விஞ்ஞானி ஆகவோ அரசியல்வாதி ஆகவோ செயற்பட முடியாது போய்விட்டது. அவர் இளைஞர் சமுதாயத்தைக் கனவு காணும் படி கூறியதோடு இந்தியா 2025ல் உலக வல்லரசாகும் எனவும் கனவு கண்டார். ஆனால் அவரால் இரண்டாம் முறையாகக்கூட ஜனாதிபதிப் பதவியைப் பெற முடியவில்லை அல்லது பெறும் மனநிலையில் அவர் இருக்கவில்லை. அதாவது அரசியல் சகதியில் விழாமல் தப்பித்துக் கொள்ளும் அளவுக்கு அன்று அவரது மூளை சிறப்பாகச் செயற்பட்டது எனலாம்.

ஆனால் அன்று அவர் அரசியல் வாதியாக மாறாது உத்தமராக நடந்து கொண்டவர் இன்று காங்கிரஸ் தலைமையிலான கூட்டுறவு ஆட்சிக்கு முக்கிய பிரச்சாரகராக விளங்கி தமது தரத்தைக் குறைத்துக் கொண்டார்.

கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது என ஒரு அணு விஞ்ஞானியான அவர் அரசுக்கு ஆதரவாக மக்கள் முன் பிரச்சாரம் செய்வது ஆறு அறிவுள்ள மனிதர் எவரும் ஏற்கமுடியாத நிலையாகும். இவர் இதனைக் கூறும் முன்னரே பல பொது மக்கள் அணுக்கதிர் வீச்சின் பாதிப்புக்கு உள்ளாகி இறந்தும் நோய்வாய்ப்பட்டும் உடல் ஊனமுற்றும் பிறந்து உள்ளனர்.






அப்பாவி மக்களின் நலனைச் சிறிதும் சிந்திக்காத விஞ்ஞானியாகக் கலாம் மாறிவிட்டார்.

உள்ளூர் மக்களின் உயிரோடு விளையாடியது போதாது என நினைத்துப் போலும் கடல் கடந்த இலங்கைத் தமிழர் இன அழிப்புப் போரில் ஆயிரக் கணக்கில் கொல்லப்படும் பொழுது எதுவும் பேசாது இருந்தவர் இப்போது இலங்கை இந்திய அரசுகளின் தேவைகளுக்காக ஈழத் தமிழர்களுக்கு சிங்களத்தோடு சேர்ந்து வாழப் பாடம் நடத்துகிறார்.

பனையால் விழுந்தவனை மாடு மிதிப்பது போல் கலாமின் பேச்சு அம்மக்களின் மூளையைச் சலவை செய்யும் விதமாக அமைந்தது. கசாப்புக் காரனுக்கு கருணை பற்றிப் பேசாது கழுத்தில் கத்தியைத் தாங்கும் வெள்ளாட்டுக்கு கருணை பற்றிப் பேசுவதாக இருந்தது கலாமின் செய்கை. இத்தனைக்கும் தமிழ் இனப்படுகொலையைச் செய்தவர்கள் இலங்கை இந்திய அரசுகளே என முழு உலகமும் அறிந்ததை இந்த அணுவிஞ்ஞானி எப்படி அறியாது இருக்க முடியும்?

தமிழ் மக்களின் வேதனைத் தீயை அணைக்காமல் எண்ணை ஊற்றி எரிய வைக்கும் பணியில் முதலில் சொல்வேந்தர் சுகி சிவம் வந்து காலட்சேபம் நடத்தினார். பின்னர் வந்த வாழும் வழி குரு ஸ்ரீ ரவிஷங்கர் மக்களுக்கு உண்மையான மன அமைதிக்கு பயிற்சி கொடுத்துப் போனார். அவர் உண்மையிலேயே போரை நிறுத்த முயற்சி எடுத்த மகான். அவர் வருகையும் தரிசனமும் பல்லாயிரம் மக்களின் மனங்களை இதமாக வருடிப் போனது.

ஆனால் போரை நிறுத்தவோ போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித நீதி-யோ நிவாரணமோ பெற்றுக் கொடுக்க நினைக்காத கலாம் சிங்களத்தோடு சேர்ந்து வாழும் யோசனைளைக் கூறியவர் தம்மை அழைத்த சிங்களத் தலைமைக்கும் மக்களுக்கும் தமிழ் மக்களை வாழ வையுங்கள் எனக் கூறாது விட்டது ஏன்?



# K.B. INTERCOM

Kiosque, Tabac, Internet, Télécommunication,
Alimentation Africain, Aisatique & Amerique du Sud

**மிகக் குறைந்த விலையில் அனைத்து நாடுகளுக்குமான தொலைபேசி அட்டைகள்!**



**மரக்கறி வகைகள், அதிகுளிரூட்டப்பட்ட மீன் மற்றும் இறைச்சி வகைகளை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு:**

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44



WESTERN UNION
MONEY TRANSFER

**தற்பொழுது உலகெங்குமான துரித பணமாற்றுச் சேவையும் உண்டு.**

# மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் சிறி லங்காவுக்கு ஆபத்து?

சண் தவராஜா



தெற்காசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக், இராஜாங்கத் திணைக்களத்தின் குடிமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் பிரிவுச் செயலாளர் மரியா ஒட்டரேகா அம்மையார் ஆகியோரின் இரண்டு நாள் இலங்கை விஜயமும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் சிறி லங்கா அரசுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையும் பலத்த எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது.

இம்மாதம் 27 ஆம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைக் குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடாத்தக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப் படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தமை தெரிந்ததே. ஆனாலும், அத்தகைய தீர்மானம் நிச்சயம் கொண்டுவரப்படுமா என்ற சந்தேகம் தொடர்ந்து நிலவி வந்தது. அத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்துவிட தமிழர் தரப்பும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ச்சியாக கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

அதேவேளை, சிறி லங்கா அரசாங்கமோ அத்தகைய ஒரு முயற்சியைத் தடுத்துவிட தனது வளங்கள் அனைத்தையும் பாவித்து வருகின்றது.

இத்தகைய பின்னணியில் அமெரிக்க உயர்மட்டக் குழுவின் இலங்கை விஜயமும் அமெரிக்காவின் அறிவிப்பும் மிகுந்த கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன.

ஆணைக்குழுவின் அறிக்கை பக்கச் சார்பு அற்றது என்றோ முழுமையானது என்றோ அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாத போதிலும் இதனை ஒரு தொடக்கமாகக் கொள்ள முடியும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு. இதனடிப்படையிலேயே அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. ஆகக் குறைந்தது 19 ஆவது மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சிறி லங்கா அரசாங்கமே சமர்ப்பித்து அதில் கூறப்பட்டுள்ள விதப்புரைகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடைமுறைப் படுத்துவோம் என்கின்ற உறுதிமொழியையாவது வழங்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு.

47 அங்கத்தவர்களைக் கொண்ட மனித உரிமைக் குழுவில் 2009 மே மாதத்திலும் சிறி லங்கா அரசுக்கு எதிரான ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டது. ஆனால், சிறி லங்கா அரசைக் கண்டிக்கும் நோக்குடன் முன்மொழியப்பட்ட அந்தத் தீர்மானம் போதிய ஆதரவு கிட்டாமையால் அறிக்கையின் வாசகங்கள் மாற்றப்பட்டு ஈற்றில் சிறி லங்கா அரசைப் பாராட்டும் ஒரு தீர்மானமாக மாறியது. சிறி லங்கா விவகாரம் என்பதற்கு அப்பால் காலனித்துவ நலன்களைப் பேணும் மேற்குலகினால் முன்மொழியப்படும் தீர்மானம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றே அப்போது பெரும்பாலான உறுப்பு நாடுகளால் பார்க்கப் பட்டிருந்தது.



தற்போது அமெரிக்கா ஆதரவு வழங்கவுள்ள தீர்மானத்திற்கும் அதேகதிதான் ஏற்படுமா? அல்லது உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்று தீர்மானம் நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி எழுப்பப் படுகின்றது.

தற்போதைய நிலையில் ஆஸ்திரியா, பெல்ஜியம், இத்தாலி, நோர்வே, ஸ்பெயின், சுவிற்சர்லாந்து ஆகிய 6 ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு நிச்சயம் அமெரிக்காவுக்குக் கிட்டும் என எதிர்பார்க்கலாம். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் செக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, மோல்டோவா குடியரசு, ருமேனியா, ரஸ்யா ஆகிய நாடுகள் உள்ளன. இவற்றுள் ரஸ்யா தவிர்ந்த ஏனைய நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடும். தீர்மானத்தின் தன்மையைப் பொறுத்து சில வேளைகளில் ரஸ்யா கூட தனது ஆதரவைத் தெரிவிக்கலாம். ஏனெனில், போர்க்குற்ற விசாரணையைக் கோராத அதேவேளை தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்கும் எந்தவொரு தீர்வுத் திட்டத்துக்கும் தனது ஆதரவு இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ரஸ்யா ஏலவே தெரிவித்துள்ளதாக ஒரு தகவல் உள்ளது.

மனித உரிமைக் குழுவில் 13 ஆபிரிக்க நாடுகள் உள்ளன. அவற்றுள் அரைவாசி நாடுகள் ஆதரவு தெரிவித்தால் கூட மொத்தம் 18 வாக்குகள் பிரேரணைக்கு ஆதரவாகக் கிடைத்துவிடும்.

13 ஆசிய நாடுகளில் இந்தோனேசியா, ஜோர்டான், குவைத், கிர்கிஸ்தான், மலேசியா, பிலிப்பைன்ஸ், கட்டார், சவூதி அரேபியா மற்றும் தாய்லாந்து ஆகிய 9 நாடுகளின் ஆதரவை அமெரிக்காவால் திரட்ட முடியலாம். தற்போது அரசியல் ஸ்திரமின்மை நிலவிவரும் மாலைதீவு யாருக்கு வாக்களிக்கும் என்பதை ஊகிப்பது கடினம். பதவி விலக்கப்பட்ட ஜனாதிபதிக்கு இலங்கை ஆதரவளித்து வருவதால் சிலவேளை தனது அதிருப்தியை வெளியிட மாலைதீவு இதனை ஒரு தருணமாகப் பாவித்து சிறி லங்காவிற்கு எதிராக வாக்களிக்கக் கூடும். பங்களாதேஷ், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இதில் விடுபடுகின்றன. இந்தியாவின் ஆதரவை தனது முயற்சிக்குப் பெறுவதில் அமெரிக்கா தொடர்ந்து முயன்று வருகின்றமை தெரிந்ததே. ஆதரவு தராவிட்டாலும் கூட இந்தியா வாக்களிக்காமல் விட்டாலேயே அது பாரிய வெற்றிதான்.

இந்நிலையில் தென்னமெரிக்க மற்றும் கரீபிய நாடுகள் எட்டும் எதிர்த்து வாக்களித்தாலும் கூட பிரேரணை வெற்றி பெற்றுவிடும் வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே மேற்குலகு செய்த முயற்சி ஒன்று 2009 இல் தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் இம்முறை செய்யப்படும் முயற்சி மிகுந்த எச்சரிக்கை மற்றும் முன்னாயுத்தம் என்பவற்றுடனேயே முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

அது தவிர, இம்முறை தமது சொந்த ஆவணங்கள் எதனையும் முன்வைக்காது சிறி லங்கா அரசாங்கத்தின் ஆவணத்தையே முன்னிலைப்படுத்தி அதனை அமுல்படுத்துமாறு கேட்கும் போது உறுப்பு நாடுகள் அதற்கு எதிப்புத் தெரிவிப்பது கடினமாக இருக்கும் என்பதுவும் சாதகமான அம்சம்.

ஆனால், இவை அனைத்தையும் சிறி லங்கா அரசும் நன்கறியும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லெண்ண ஆனைக்குழுவின் அறிக்கையை மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்குமாறு ஏலவே கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போது அவ்வாறு ஒருபோதும் செய்யப் போவதில்லை எனச் சிறி லங்காத் தரப்பில் ஆணித்தரமாகக் கூறப்பட்டிருந்தமை அறிந்ததே.

அது தவிர மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான பரிவாரங்கள் ஏற்கனவே ஜெனீவாவில் முகாமிட்டு உத்தேச பிரேரணைக்கு எதிராகச் சூறாவளிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் எட்டியுள்ளன.



சிறி லங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவும் ஆதரவு திரட்டும் நோக்கில் இந்தியா சென்றுள்ளார்.

என்றாலும் கூட, அமெரிக்காவின் முயற்சி வெற்றி பெறுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றமையை சிங்களத் தரப்பு உணர்ந்துள்ளது போன்று தென்படுகின்றது. அதன் விளைவாக நிலைகுலைந்துள்ள அந்தத் தரப்பிலிருந்து சீற்றம் வெளிப்பட்டுள்ளது. இந்தச் சீற்றம் அமெரிக்க உயர்மட்டக்குழு தமிழ் தேசி-யக் கூட்டமைப்பை முதன்முதலில் சந்தித்தமை தொடர்பில் நன்கு வெளிப்பட்டது. ஓ பிளேக் அவர்களின் முன்னைய விஜயத்தின் போதும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே முதன்முதலாகச் சந்தித்திருந்தார். இதற்கு சிறி லங்காத் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதனைச் சட்டை செய்யாது இரண்டாவது தடவையும் அவர் கூட்டமைப்பையே முதலில் சந்தித்தமை அமெரிக்க அரசின் அணுகுமுறையில் உள்ள மாற்றத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

அரச பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்கள் கூறுகின்ற விடயங்களைச் செவிமடுத்துவிட்டு தமிழ்த் தரப்புக்குக் காவும் வழக்கமான நடைமுறையால் பயனேதும் விளையாது என்பதைப் புரிந்து வைத்துள்ள அமெரிக்கா, இன்றைய நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதே ஆற்றப்பட வேண்டிய பணி என்ற முடிவிற்கு வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

அதேநேரம், இந்தப் படிநிலை மாற்றத்தின் கசப்பான உண்மை சிங்களத் தலைமைகளைப் பெரிதும் சீற்றங் கொள்ளச் செய்துள்ளது. அமெரிக்கக் குழுவினர் கூட்டமைப்பை முதலாவதாகச் சந்தித்தமை இராஜதந்திர நடைமுறைகளுக்கு முரணானது என அவர்கள் பாடம் நடாத்தி வருகின்றனர்.

இந்தச் சர்ச்சை தொடர்பாக ஊடகமொன்றின் கேள்விக்குப் பதிலளித்துள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், "தமிழ் மக்களுக்கே குறைகள் உள்ளன. எனவே, குறைகளை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அவர்களிடமே முதலில் பேச வேண்டும். குறைகளைக் கேட்டு அறிந்த பின்னர் அவற்றை அரசாங்கத்திடம் தெரிவிக்கலாம்'' என மிகச் சரியாகவே தெரிவித்துள்ளார். இதனைச் சிங்களம் மாத்திரமன்றி மனச்சாட்சிக்கு விரேதமாக சிறி லங்கா அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் சக்திகளும் புரிந்து கொண்டால் தமிழ் மக்களுக்கு மிகவும் நல்லது.

போரின் இறுதிக் கட்டத்தில் உலகின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு சிறி லங்காப் பேரினவாதம் ஆடிய வெறியாட்டத்தின் அவல நினைவுகள் ஈழத் தமிழ் மக்களின் மனங்களில் இன்னமும் பசு-மையாக இருந்து வருகின்றன. அமெரிக்கா முன்மொழியப் போகின்ற தீர்மானம் தமிழ் மக்களின் ஈடு செய்ய முடியாத இழப்புக்களுக்கு முற்று முழுதாகப் பரிகாரம் காணுகின்ற ஒன்றாக அமையாது விட்டாலும் கூட ஒத்தடம் போடுகின்ற ஒன்றாகவாவது அமையும் என நம்பலாம்.





# 2ஜீ அலைக்கற்றை வழக்கில் பெரிய தலைகள் உருளுவதைத் தடுக்க முடியுமா?

1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் வழக்கின் விதியை தீர்மானிக்கும் சக்தியாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி விளங்குகிறார். அவர் தமது சுய முயற்சியால் பொது நல வழக்குகள் மூலம் நீதி மன்றக் கதவுகளைத் தட்டாது விட்டிருந்தால் இன்று எல்லாமே அடங்கிப் போயிருக்கும். ஆனால் அவரது முயற்சியால் சிறப்புச் சி.பி.ஐ. நீதிமன்றம் பலரைச் சிறைக்கு அனுப்பி இன்னும் சிலரை அனுப்ப வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப் பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இப்போது முதலிடத்தில் ஊசலாடிக் கொண்டிருப்பவர் முன்னாள் நிதி அமைச்சரும் இந்நாள் உள்துறை அமைச்சருமான திரு.ப.சிதம்பரம் ஆவார். சிதம்பரத்துக்கும் வழக்கில் கைதாகி டெல்லி சிறையில் இருக்கும் முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.இராசா மீது சுமத்தப்பட்ட குற்றத்துக்கும் கூட்டுப் பொறுப்பு என்ற வகையில் பங்கு உண்டு . எனவே அவரும் வழக்கில் ஒரு சந்தேக நபராகச் சேர்த்து விசாரிக்கப்பட வேண்டும் என டெல்லி உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் சுப்பிரமணிய சுவாமி.

வழக்கை விசாரித்த உச்ச நீதி மன்றம் சிதம்பரம் நேரடியாகத் தொடர்பு பட்டிருப்பதற்கான ஆதாரம் இல்லை எனவும் அவர் விசாரிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை சி.பி.ஐ.யின் சிறப்பு நீதி மன்றமே முடிவு செய்ய வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது. அதே நேரத்தில் முறைகேடாக இடம்பெற்ற 122 அலைக்கற்றை கற்றை அனுமதியையும் ரத்து செய்து மீண்டும் ஏலமுறையில் விற்பனை செய்யவும் ஆணையிட்டுள்ளது. அதனால் விற்பனையால் பயனடைந்த கம்பனிகளும் அவற்றுக்குப் பெருமளவு கடன் வழங்கிய வங்கிகளும் பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கி உள்ளன. இதனை மன்மோகன் சிங் தலைமையிலான அரசு எந்த வழியிலும் சரி செய்யவே முயலும். அத்தகைய நடவடிக்கையில் ஒன்றாகவே ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் முகவர் நிலைய அதிபர் நீரா ராடியா என்ற பெண்ணின் தொலை பேசி உரையாடல் பதிவுகள் பொய்யாகப் புனையப் பட்டவை என்று அரசு தரப்பு கூறத் தொடங்கிவிட்டது. தேர்தலை எதிர் நோக்கும் நிலையில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான கூட்டரசு இந்த ஊழலில் சிக்கி உள்ள அனைவரையுமே விடுதலை பெறும் வழி-யைத் தேடும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் தீர்ப்பினால் சிதம்பரம் மீதும் ஆளும் அரசின் மீதும் இருந்த அழுத்தம் நீங்கினாலும் சுப்பிரமணிய சுவாமி தொடர்ந்தும் உச்ச நீதி மன்றத்தில் நீதி கோருவேன் அப்போது சிதம்பரம் உள்ளே போகும் நிலை நிச்சயம் உருவாகும் எனக் கூறி வருகிறார்.



# ...ஆதலால் காதல் செய்வோம்!...

- அறிவழகன் -

காதல் எனப்படும் அன்பு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும். அன்பு என்ற சொல்லை ஆங்கிலத்தின் "love" என்ற சொல்லுக்கு இணையாகக் கருதினாலும், "love" என்னும் சொல் குறிக்கும் எல்லாப் பொருளையும் "அன்பு" என்னும் சொல் குறிப்பதில்லை. "love" என்பதற்க ஆங்கிலத்தில் பல பொருள்கள் உள்ளன. பொதுவாக ஒரு பொருள் அல்லது செயலின் மீது உள்ள "விருப்பம்" , இருவருடையே காணப்படும் பொதுவான அன்பு, மிக நெருக்கமான காதல் உணர்வு வரை பல பொருள்களில் அச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. "அன்பு" என்ற சொல்லுக்குரிய உணர்வும் எண்ணக்கருவும் தமிழுக்குத் தனித்துவமானது எனலாம். இவ்வாறு மொழிகளிடையே "அன்பு" என்னும் பொருள் தரக்கூடிய சொற்கள் குறிக்கும் உணர்வுகள் பலவாறான வேறுபாடுகளைக் கொண்டவையாக இருப்பதால், அன்புக்கு உலகம் தழுவிய வரைவிலக்கணம் ஒன்றைக் கொடுப்பது கடினமானது. அதேபோல "LOVE" எனப்படும் காதலுக்கும் வரைவிலக்கணம் கொடுக்கப்படமுடியாத சூழ்நிலையிருப்பினும், காதல் என்பதன் அழுத்தம்கொண்ட அர்த்தத்தினை இன்றைய இளைஞர் யுவதிகளுக்கு நாம் புரியவைக்க வேண்டியதில்லை

கருப்பொருள் இன்றி மலரும் ஒரேஒரு விடயம் காதல் மட்டுமே என்கிறார்கள் மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள். உயிரணுக்களால் கட்டுப்படுத்தப்படும் உடற்கூறு, காதலைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியாமல் தவிப்பது ஆச்சரியத்துக்குரிய ஒரு வினோதம். பசி, தூக்கம், களைப்பு எதுவுமே அறியாத காதல்உணர்வு மனிதர்களுக்கு மட்டுமே உரித்தானதொன்று. மூளையின் செயற்பாட்டுக்கு அப்பாற்பட்ட உணர்வாகவும், மூளையின் கட்டளைகளையே குழப்பக்கூடிய அதிசக்தி வாய்ந்த உணர்வாகவும் இந்தக்காதல் மனிதனைப் பாடாய்ப்படுத்துகின்றது. வயது வேறுபாடின்றி இதயத்தை ஆட்கொள்ளும் உணர்வாகவும், பயஉணர்வைப் போக்கும் அதீத சக்தியாகவும், நினைத்ததை முடிக்கும் அதீத பலம்கொண்ட உணர்வையும், காதலால் மட்டுமே தரமுடிகிறது. இதனை மருத்துவ உலகமும் ஒப்புக்கொள்கிறது. ஆனாலும் கீழைத்தேயக் கலாச்சாரத்தின் வாழ்க்கை முறைமைக்கு காதல் என்பது, அவசியமற்ற, வயதுத்தேவையின் நிமித்தம் உருவாக்கப்படுகின்ற அருவருப்பான உணர்வாகவே கடந்த பல நூற்றாண்டுகளாக நோக்கப்பட்டது. மதம், இனம். சாதி வேறுபாடுகளுக்குள் சிக்கிகொண்ட கீழைத்தேய மனிதசமுதாயம், காதல் என்ற அற்புதமான உணர்வை, நாகரீகம் என்ற போர்வைக்குள் நசுக்கிவைத்துக்கொண்டது. மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியில், தற்போது இந்நிலை தளர்வடையும் நிலையில் இருந்தாலும் கூட, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஆகிய நாடுகளின் கிராமப்புற வாழ்க்கை முறைமையில், காதல் என்பது இன்னமுமே அவசியமற்றதொன்றாகவும், அருவருப்பனதொன்றாகவும், ஏன் தண்டனைக்கான ஒரு குற்றமாகவும் கூட பார்க்கப்படுகிறது என்றால் அது மிகையில்லை.

சாதி, மதம், உடலழகு, பொருளாதாரநிலை, கல்வி ஆகியவற்றை அடிப்படையாக நோக்காத காதல் உண்மைத்தன்மை நிறைந்ததாக அமைகிறது. அதீத விஞ்ஞானவளர்ச்சி, இயந்திரத்தனமான வாழ்வுமுறை, புறச்சூழ்நிலையின் தாக்கம் ஆகியன காரணமாகவும் உண்மைக்காதலாக ஆரம்பிக்கும் உணர்வு சிலவேளைகளில் வழிதவறிப்போகும் நிலைக்கு மாறுகின்றது.வெறுமனே வாலிப வயதின் இனக்கவர்ச்சியாக அமையும் காதல்கள், ஒருபோதும் உண்மைக்காதலாக மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவாகும். ஆனாலும் காதல் என்பது, காதலிக்கப்படும் வேளைகளில் உண்மை பொய் பற்றிச் சிந்திப்பதில்லை, நியாய அநியாயங்கள் பற்றி அலட்டிக்கொள்வதில்லை. வெட்க உணர்வு கூட சிலவேளைகளில் அற்றுப்போகும் நிலைக்கு காதல் மனிதனை மாறிவரச் செய்கிறது. எது என்னவாயினும் காதல் என்ற உணர்விற்கு , அது ஆட்கொள்ளும் மனிதனைப் பொறுத்தே வாழ்வும் சாவும் அமைகிறது என்பதே அடிப்படையான உண்மை.

எவ்வளவு தான் விஞ்ஞானம் மாற்றமடைந்து வரினும், காதலுக்கு அடிப்படை "கண்கள்" மட்டுமே. "ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்" என்பதைப்போல சில விதிவிலக்கான காதல்கள் ஒருவரையொருவர் பாராமலே உருவாகிவிடுகின்றன. ஆனாலும் கண்கள் பார்த்து உருவாகும் காதலுக்கு ஒரு தனிச்சிறப்பு உள்ளதென்று "அனுபவசாலிகளிடம்" கேள்வியுற்றிருக்கிறேன்.

முன்னைய நாட்களில் காதல் பரிமாறப்படும் கடிதங்கள் தனிச்சிறப்பைப் பெற்றுவிடுகின்றன. குறிப்பாக் இராணுவ வீரர்கள், கப்பலோட்டும் மாலுமிகள், கல்வி தொழில் தேவைகள் நிமித்தம் தொலைதூரம் பயணப்படும் இளைஞர்கள் தங்களது காதலை அப்படியே கடிதத்தில் கொட்டிவைத்து அனுப்புவார்கள். நாட்கள், மாதங்கள் கடந்து பெறப்படும் அக்கடிதத்தின் மீது இருக்கும் அவாவும், மரியாதையும் இப்போதைய இளைஞர்கள் மேற்கொள்ளும் இணையஅரட்டை, மின்னஞ்சல்கள் ஆகியவற்றிற்குக் கிடையாது என இங்கிலாந்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ ஆதிகாரியான பெநேடிசர் குறிப்பிடுகிறார். அவர் தனது காதலின் ஆரம்பநாட்களில், போர்முனையிலிருந்து தன் காதலிக்கு எழுதிய கடிதங்களின் நினைவுகளையும், தன் காதலி தனக்கு எழுதிய கடிதங்களின் மூலங்களையும் பேணிப்பாதுகாத்து வருகிறார். தனக்கு ஏற்படும் பசி, தாகம் என்பன ஏற்படுத்திய எதிர்பார்ப்பை விட, வாரம் ஒரு முறை கடிதங்களைத் தாங்கி வரும் விமானமே அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிடுகிறார்.

காதலின் பிரிவில் ஏற்படும் வலி, காதலன் அல்லது காதலி திரும்பி வரும்வரையில் ஏற்படும் பயம் கலந்த பிரிவு வேதனை என்பனவும் சுகமான அனுபவங்களே என்று மனோதத்துவவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். காதலின் பிரிவில் தவிப்பவர்கள் மாலை வேளையை மிகவும் இரசிப்பார்கள் எனப்படுகிறது. மஞ்சள் வெயில், மலையோரக்காற்று, மாலைக் கடற்கரை, மாலைநேரவானவில், மாலைக்குளிர், மாலைநேரத்து வானொலிப்பாடல், மாலைநேரப்பயணம் என்பன காதல் வலியைச் சற்று சாந்தப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.


காதலின் நினைவால் பரிமாறப்படும் பரிசுப்பொருட்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம் வேறெதற்கும் தரப்படுவதில்லை எனலாம். தனது அன்புக்குரியவரால் தரப்படும் பொருட்களின் விலைமதிப்பை விட, அது ஏற்படுத்தும் உணர்வுகளுக்கு மதிப்பு அதிகம் என்கிறார்கள் காதலர்கள். சாதாரண வாழ்த்துஅட்டை தொடக்கம், விலைமதிப்பற்ற பொருட்கள் வரை பரிசாகப் பரிமாறிக்கொள்ளப்பட்டாலும், அவை அத்தனையும் அன்பை மட்டும் அடையாளப்படுத்துகின்றன என்பதே அடிப்படை. அமெரிக்காவில் மட்டும் ஒவ்வோர் ஆண்டும், காதலர்தினத்தன்று 14.1 மில்லியன் டொலர்கள் வரையான பரிசுப்பொருட்கள் விற்கப்படுகின்றன. இதற்கு அடுத்தபடியாக இங்கிலாந்து 12 மில்லியன்டொலர்கள் வரையான பரிசுப்பொருட்களை விற்றுத்தள்ளுகிறது. இந்த வருடத்தில், காதலர் தினத்தின் பரிசுப்பொருளாக Apple நிறுவனம் 37,915 அமெரிக்கக் டொலர்கள் பெறுமதியுடைய i-phone செல்லிடத்தொலைபேசி ஒன்றை அறிமுகம் செய்திருக்கிறது,இது முற்றுமுழுதாக 22ct தங்கம், மற்றும் வைரத்தினால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

காதலை முற்றுமுழுதாக எதிர்க்கும் மக்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். கீழைத்தேய நாடுகளைச் சேர்ந்த பெற்றோர்கள், அல்லது பாதுகாவலர்கள் தங்களது வளர்ப்பில்

இருக்கும் பிள்ளைகள் தொடர்பான வாழ்வு முறையில், காதல் குறுக்கீடு செய்வதாகக் கருதுகிறார்கள். காதலின் மூலமாகத் தேடப்படும் வாழ்க்கைத்துணை, சிறப்பாக அமையாது என்பது ஒருசாரார் கருத்தாக அமைகின்றபோதிலும், இன்றைய நாட்களில் தமது துணையைத் தாமே தேடிக்கொள்ளும் அவசியத்தையே இளைஞர் யுவதிகள் விரும்புகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்தியாவின் "சிவசேனா" எனப்படும் கட்சி முற்றுமுழுதாக காதலை எதிர்க்கிறது. காதலித்தால் அவர்கள் கணவன் மனைவியாக மட்டுமே இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இதன்காரணமாக காதலர்தினத்தன்று, சிலமாநிலங்களில் காதலர்களுக்குக் காவல்துறையின் பாதுகாப்பு வழங்கவேண்டிய நிலைக்கு இந்திய அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது.

எது எவ்வாறிருப்பினும் காதல் என்பது வாழ்விற்கு அவசியாமனதொன்று. ஆனால் அது நாகரீகப்பண்புகள் நிறைந்ததாக அமையவேண்டும். உண்மையும், நேர்மையும் கொண்டதாக உருவாகும் காதலிற்கு ஒருபோதும் அழிவு என்பதே கிடையாது. ஆதலால் காதல் செய்வோம்...!

குறிப்பு : காதலர் தினம் பொதுவாக பெப்ரவரி 14 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்வது மரபாக இருக்கிறது. வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். "வலன்டைன்" என்ற பெயருடைய இரு கிறித்துவத் தியாகிகளின் பெயர்களை அடுத்து இந்நாள் "வலன்டைன்" நாள் என்றும், காதலர்களே பெரும்பாலும் இந்நாளைக் கொண்டாடுவதால் காதலர் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் நாளாகவும் இது இருப்பதால் அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாளை கொண்டாடும் போக்கு இளைஞர்களிடையே கூடி வருகிறது. எனினும், இது மேலை நாட்டுப் பண்பாடுகளை திணிக்கும் முயற்சி என்றும் காதலின் பெயரால் நினைவுப் பரிசுப் பொருட்களை விற்கும் வணிகமயமாக்கம் என்றும் ஒரு சாராரால் குற்றம் சாட்டப்படுகிறது.



# Orient Textiles and Jewellery

2011 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.



சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.

**உரிமையாளர்: S.ஜெகதீஸ்**

Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36

165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958




## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆட்டம் போடும் அரசியல்வாதிகளும் அவர்களுக்குக் கூஜா தூக்கும் அதிகாரிகளும்!...

- இலட்சுமணன் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் அறிவிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச செயலாளர்களின் இடமாற்றமும் அவற்றுக்கு எதிராக எழுந்த உணர்வலைகளும் தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் மட்டக்களப்பில் அரச அதிபரின் ஆதரவுடன் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன.

அரசியலானது அரச நிர்வாகத்தின் மீது கட்டுப்பாடற்ற முறையில் ஆதிக்கம் செலுத்தும் போது அது பொதுமக்களுக்கு மிகப்பாரதூரமான பாதிப்புக்களையே ஏற்படுத்தும். அதன் விளைவாக மட்டக்களப்பில் தமிழர் வசம் நியாயமாக இருக்க வேண்டிய ஆதிக்கம் முஸ்லிம்கள் பக்கம் சென்றுவிடக் கூடிய அபாயம் தோன்றிவருகிறது. இந்த ஆபத்து அதிகாரத்தில் உள்ளவர்களுக்குப் புரிவதாக இல்லை. அண்மையில் நடைபெற்ற பிரதேச செயலாளர்களின் இடமாற்ற முயற்சி இது பற்றிய சிந்தனையைத் தோற்றுவித்து நிற்கிறது.

தமிழர்களிடம் உள்ள அரசியல் அதிகாரங்களையும், ஆதிக்க பலத்தினையும், அனுபவத்தினையும், மக்கள் பலத்தினையும், திறமையையும் இணைத்துப் பயன்படுத்தும் போது அதற்குக் கிடைக்கக் கூடிய பலன் மிகப்பெரியது என்பது தமிழ் மக்களுக்குப் புரியவில்லையா, அல்லது தமிழ் அரசியல்வாதிகள் இது தொடர்பில் வேண்டுமென்றே அக்கறையற்றவர்களாக இருக்கிறார்களா என்ற சந்தேகம் எழுவதைத் தடுக்க முடியவில்லை.

அண்மையில், மட்டக்களப்பில் நடைபெறவிருந்த பிரதேச செயலாளர்களின் இடமாற்றத்தின் பின்னணியில் ஒருசில முஸ்லிம் அரசியல்வாதிகளின் கபட நோக்குடன் கூடிய நில ஆக்கிரமிப்புச் சிந்தனையும், தமிழர்விரோத நிலைப்பாடும் அடக்குமுறை அரசியல் கண்ணோட்டமும் இருப்பதாகத் தெரிகின்றது. இந்த இடமாற்றத்தின் பின்னணியில் மாவட்ட அரசாங்க அதிபருக்கெதிரான புகார்களுடன் கூடிய துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டமையும் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமையும் இதற்குச் சான்றாக உள்ளன.

இவ்வாறு சந்தேகம் எழுவதற்குக் காரணமாக இருந்த விடயங்களில் முக்கியமானது இந்த

இடமாற்றத்தின் போது தமிழ்ப் பிரதேசங்களில் வாகரை தவிர்ந்த ஏனைய பிரதேசச் செயலாளர்களுக்கு மாத்திரம் இடமாற்றங்கள் வழங்கப்பட்டமையே ஆகும். முஸ்லிம் பிரதேசச் செயலாளர்கள் எவரும் இந்த இடமாற்றத் திட்டத்தில் இடம் பிடித்திருக்கவில்லை.

சிநேகபூர்வமாக இருப்பதாகக் கூறிக் கொண்டே மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நம்மை அணுகும் ஒரு சமூகத்தின் தேவைக்குத் துணைபோகும் செயற்பாடாகவே பிரதேசச் செயலாளர்களின் இடமாற்றச் செயற்பாடு பார்க்கப்பட்டது. அதிகாரம் அடக்கு முறையாக மாறி அட்டகாசம் பண்ண ஆரம்பித்ததன் வெளிப்பாடுதான் இலங்கையின் இன முரண்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது என்று சுருக்கமாகச் சொல்லலாம். கிட்டத்தட்ட அதனை ஒத்ததாகவே மட்டக்களப்பு மாவட்டப் பிரதேசச் செயலாளர்களின் இடமாற்றமும் கருதப்பட வேண்டும்.

இதில் பிரதேச மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கிவரும் வவுணதீவு பிரதேசச் செயலாளர் திரு. வில்வரெத்தினம் அவர்களை இடமாற்றம் செய்யக்கூடாது எனப் பொது மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டமே அனைத்துப் பிரதேசச் செயலாளர்களது இடமாற்றங்களும் ரத்தாக வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. புதிய வருடத்தின் முதல் நாள் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முறைகேடான இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி வவுணதீவைச் சேர்ந்த 22 கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் உருவான விழிப்புணர்வு அரசியல்வாதிகளின் தலையீட்டை ஏற்படுத்தியது. அதன் விளைவாக இடமாற்ற நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. ஆனால் இதனால் உருவான மோதல் இடமாற்ற உத்தரவைப் பிறப்பித்த மாவட்ட அரச அதிபருக்கு எதிரான நடவடிக்கையாக மாறியது.

எனினும், இரண்டு நாட்களின் பின் மட்டக்களப்பு நகரில் அரசாங்க அதிபருக்கு எதிராக இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆயுதப் படையினரால் எதுவித காரணமும் இன்றித் தடுத்து நிறுத்தப்பட்டது. தமது உத்தரவுகளுக்குப் பணிந்தும், அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவும் மாத்திரம் செயற்பட்டுவரும் மாவட்ட அரச அதிபரைக் காப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகளில் படையினர் தலையிட்டனரே அன்றி வேறில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பிரதேசச் செயலாளர்களுக்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றமானது நிர்வாக ரீதியான பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பிரதேசச் செயலாளர்களின் இடமாற்றத்தை ரத்துச்செய்ய வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஆனால், மக்களின் ஜனநா-யக உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அது தடுத்து நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நகரின் மத்தியில் காந்தி சதுக்கத்தில் ஏற்பாடாகியிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் திரும்பிச் செல்லவேண்டி ஏற்பட்டது.

எனினும், பொதுமக்களும் பொது அமைப்புகளும் இணைந்து பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் குறித்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோள்களையும் விடுத்திருந்தனர்.

நிருவாக சேவை அதிகாரிகள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும்போதே தாம் நாட்டின் எந்தப்பகுதியிலும் கடமையாற்றத் தயார் என்ற உறுதிப்பாட்டுடனேயே பதவிகளைக் கையேற்கின்றனர். ஆனால் தமது பிரதேசங்களையும், தமது நலன்களையும் தமது விருப்பு வெறுப்புக்களையும் யாரும் ஒதுக்கி வைத்துவிட்டுக் கடமைகளைச் செய்வதில்லை என்பதே யதார்த்தமாகும்.

காணிப் பங்கீட்டுப் பிரச்சினை, குடியேற்றப் பிரச்சினை, எனப் பல எரியும் பிரச்சினைகள் தமிழ், முஸ்லிம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வந்து கொண்டிருக்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அறிவிக்கப்பட்ட இடமாற்றமானது இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக அமையவில்லை. மாறாக, அவற்றினை மேலும் பெரிதாக்குவதாக இந்த இடமாற்றங்கள் அமைந்துவிடக் கூடாது என்பதே

இதனை எதிர்ப்பவர்களின் வாதமாக இருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அபிவிருத்திப் பணிகளுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், கபட அரசியல் நோக்கங்களுடனும் மேலாதிக்க சிந்தனையுடனும் செயற்பாடுகள் நடைபெறும் போது அவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியே தீருவர். மக்களுடைய எதிர்பார்ப்புக்களைச் சிதைக்கும் வகையில் எந்த ஒரு செயற்பாடு அமைந்தாலும் அதனை மக்கள் எதிர்க்கவே செய்கின்றனர். முக்கியமாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள், ஆர்வலர்கள் எனப் பலரும் ஒருமித்து எதிர்க்கும் அளவுக்கு ஒரு இடமாற்றச் செயற்பாடு நடைபெற்றமையே மட்டக்களப்பில் இவ்வாறானதொரு எதிர்ப்பு உருவாகியிருக்கின்றமைக்குக் காரணமாகும்.

ஒரு குறிப்பிட்டகால அடிப்படை இன்றியும் ஒழுங்கு விதிகள் சீரின்றியும் இடமாற்றம் நடத்தப்பட்டமையும், குறிப்பாகத் தமிழ் பிரதேசச் செயலாளர்கள் மாத்திரம் இடமாற்றம் செய்யப்பட்டமையும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அதிகாரிகள் எப்போதுமே மக்களின் நலன், பிரதேசத்தின் அபிவிருத்தி என்பவைகளைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியவர்கள். ஆனால் தமது விடாப்பிடியான போக்குகளையும் அவர்கள் வெளிப்படுத்த முனையும் போது பெரும் சிக்கல்கள் உருவாகக் கூடிய வாய்ப்புகள் தோன்றுகின்றன. அதனைவிடவும் மக்களுக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவான நிதிகளைத் தாம் தமது வீட்டிற்குக் கொண்டு செல்லும் அதிகாரிகளாலும் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

பிரதேசச் செயலாளர்கள் இடமாற்றம் போன்ற இவ்வாறான செயற்பாடுகள் மக்களின், பிரதேசத்தின் அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என்றே நம்பப்பட்டது. பிரதேசச் செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமையானது மட்டக்களப்பு மாவட்ட செயலாளருக்குத் தெரியாமலோ அல்லது அவரின் பரிந்துரை இல்லாமலோ நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்பதே போராட்டக்காரர்கள், எதிர்ப்பாளர்களது கருத்தாக இருந்தது. அதற்கு ஏற்றால்போல் அவருக்கு எதிரான நடவடிக்கைகளைப் பொது மக்கள், அமைப்புகள் மேற்கொள்ளத் துணியும் போது அவற்றைத் தடுத்து விடுவதாக திகாரத் தரப்பினருடைய செயற்பாடுகளும் அமைந்திருந்தது.

எதிர்ப்புகள், போராட்டங்களையடுத்து, இருவாரங்கள் ஒத்தி வைக்கப்பட்ட இடமாற்றம் பின்னர் மறு அறிவித்தல் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதிற் கூட மாவட்டச் செயலாளருக்குத் தொலைமடல் மூலம் அமைச்சிலிருந்து அறிவித்தல் வந்த போதும் அது தொடர்பில் வெளியில் எந்த விதமான தகவலையும் வெளியிடாது மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் மறைத்திருக்கிறார்.

மாவட்டச் செயலாளரினதும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவினதும் சதித்திட்டமே இந்த இடமாற்றங்கள் என்றும், இதற்குப் பின்னரும் சில மாற்றங்களைச் செய்ய அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள் என்றும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் கருணாவின் சகா ஒருவருடைய செயற்பாடுகளுக்குத் துணை போகாததன் காரணமாக ஒரு சில பிரதேசச் செயலாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடத்தில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமை நினைவிருக்கக் கூடும். அதன் பின்னர் தற்போதைய இடமாற்ற அறிவிப்பு வெளியாகியிருந்தது.

குறிப்பிட்ட சில பிரதேசச் செயலகப் பிரிவுகளில் முஸ்லிம்கள் அதிகமாகத் தலையிடுவதைத் தடை விதிக்கும் பிரதேசச் செயலாளர்களும், அரசியல்வாதிகள் தில்லு முல்லுகள் செய்துபணம் உழைக்கத் தடைபோடும் சிலருக்கும் தண்டனை வழங்கும் நோக்குடனேயே இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அதிகாரிகள் மட்டத்தில் தகவல்கள் உலாவுகின்றன.

பிரதேசச் செயலாளர்களின் இடமாற்றங்கள் அறிவிக்கப்பட்ட சில நாட்களிலேயே மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மற்றும் கிக்கோ என அனைவராலும் அறியப்பட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் டாக்டர் ருசாந்தன் ஆகியோரின் தில்லு முல்லுகள், ஊழல்கள் எனக் குறிப்பிடப்பட்டு பல துண்டுப் பிரசுரங்கள் அநாமதேயமாக வெளிவந்திருந்தன. மட்டுநகர் மக்களே விழித்தெழுங்கள், என்ற தலைப்பில் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வெளியாகியிருந்தன.

இவற்றில், திவிநெகும திட்டத்தில் கோழிக்குஞ்சுகளை அதிக விலைக்கு

வாங்கியதாகக் கணக்குக் காட்டியமை, உரமானியம், விதை நெல் வழங்கல், ஒப்பந்தங்களுக்கு முற்பணம் பெற்றபின் கையொப்பமிட்டமை, இல்லாத வயல்களுக்கு உழவு செய்து கொடுத்தமை, மீள்குடியேற்ற காலத்தில் அத்தியாவசியப் பொருள் வழங்கியதில் மோசடி செய்தமை, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற் திட்டங்களில் தலையீடு செய்தமை எனப் பல்வேறு விடயங்கள் குறித்து காரசாரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய பிரசுரங்கள் நூறுவீதம் உண்மையானவை இல்லையாயினும் இவை பற்றி அரசாங்க அதிபரோ, கமநல சேவைகள் ஆணையாளரோ எந்தவிதமான கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்திலும் ஒரேயொரு விடயத்தினை மட்டும் நாம் மிகக் கவனமாகப் பார்க்க முடியும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களும் பொது அமைப்புகளும் இணைந்து இடமாற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளிலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டமையானது மக்கள் விழிப்படைந்து வருகின்றனர் என்பதனையே காட்டுகிறது. அந்த வகையில் மாவட்டத்தின் அபிவிருத்தி, மேம்பாடு என அனைத்து விடயங்களிலுமே எதிர்காலத்தில் முன்னேற்றகரமான விருத்தி நிலை ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுகின்றது. இது வரவேற்கத்தக்கது.

தமிழ் மக்களின் அநேக சீரழிவுகளுக்கும், கீழ்நிலைப் படுகைக்கும், அழிவுகளுக்கும் சுயநலமிக்க அதிகாரிகளும், பணத்துக்காகவும், வேறு நலன்களுக்காகவும் சோரம் போகின்றவர்களின் செயற்பாடுகளுமே காரணமாகும். தெரிந்து நடக்கின்ற சில விடயங்கள், தெரியாமல் முடிகின்ற பல தொகை விடயங்கள் எல்லாமே கண்டுபிடிக்கப்பட்டு மக்களால் தீர்வு காணப்பட வேண்டும்.

நீண்டகாலமாக இனப்பிரச்சினை என்ற கொடிய யுத்தத்துக்குள் இருந்து மீண்டு வந்த தமிழ் மக்கள் கல்வி, பொருளாதார, தொழில் மற்றும் உட்கட்டுமானங்கள் என அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்களாக அபிவிருத்திக் குறிக்கோளுடன் செயற்படும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் சிறந்த வகையிலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிரதேசத்தின் மேம்பாடு எதிர்கால சந்ததியினருடைய முழுமையான நலனையும் பாதுகாக்கின்ற ஒன்றாக அமையும்.





# ஜெனிவாவில் உருவாகும் நெருக்கடியும் அமெரிக்காவின் காய் நகர்த்தல்களும்.

- கொழும்பிலிருந்து பவித்திரன் -

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 வது கூட்டத் தொடர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள புதிய காய் நகர்த்தல்கள் கொழும்பைத் திகைக்க வைத்துள்ளன. ஜெனிவாவில் தமக்கு ஆபத்துக் காத்திருக்கின்றது என்ற உணர்வை அது கொழும்புக்குக் கொடுத்துள்ளது. இந்தப் பின்னணியில் ஜெனிவாவில் உருவாகக்கூடிய சவால்களைச் சமாளிப்பதற்கு முழு அளவிலான தயாரிப்புக்களில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரின் தலைமையிலான குழுக்கள் சர்வதேச ஆதரவைத் திரட்டும் நோக்கத்துடன் வெளிநாட்டுப் பயணங்களை ஆரம்பித்துள்ளார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழமைபோல தனது வீராவேசப் பேச்சுக்களைத் தொடர்ந்துகொண்டிருந்தாலும், அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பணிந்துபோக வேண்டியது தவிர்க்க முடியாதது என்றால் அதற்கும் மகிந்த அரசு தயாராக இருப்பதாவே தெரிகின்றது. ஏனெனில் வரப்போகும் நெருக்கடி பாரதூரமானதாக இருக்கலாம் என்ற எச்சரிக்கை இலங்கைக்குப் பல்வேறு வழிகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலத்தில் அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் இரண்டு நகர்வுகள் இலங்கையைக் குழப்பியிருக்கின்றது எனக் குறிப்பிடலாம் ஒன்று அமெரிக்க உயர் அதிகாரிகள் இருவரின் வருகை. இரண்டாவது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஒரு கடிதம்!

அமெரிக்காவின் போர்க் குற்ற விவகாரங்களுக்குப் பொறுப்பான விஷேட தூதுவர் ஸ்ரேபன் ரப் கொழும்பு வரவிருக்கின்றார். சியரலியோன் நாட்டில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் வழக்கைத் தாக்கல் செய்வதற்கான பொறுப்பை இவரே ஏற்றிருந்தார். போர்க்குற்றம் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆலோசகராகவும் பணியாற்றும் இவர் கொழும்பு வருகின்றார் என்ற செய்தி இலங்கை அதிகாரிகளுக்கு வயிற்றைக் கலக்கும் பேதி மருந்தாகவே வந்திருக்கின்றது. இதற்கு அடுத்ததாக இலங்கைக்கு நன்கு அறியப்பட்டவரான அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்கு மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பாகவுள்ள றோபேர்ட் ஓ பிளேக் கொழும்பு வருகின்றார்.

இவர்களுடைய வருகையின் போது உருவாகக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கே தடுமாற்றத்தில் இலங்கை அரசு இருக்கும் நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதுவர் கடந்த வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் கடிதம் ஒன்றைக் கையளித்திருக்கின்றார். அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் கடிதத்தில் அதிர்ச்சியான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

1. ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பானது. இதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என இச்செய்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் வடமாகாண சபைக்கான தேர்தல் தொடர்பில் இலங்கை அரசின் அணுகுமுறை என்ன என்பது தொடர்பாக ஆராய்வதற்காக வாஷிங்டன் வருமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அமைச்சர் பீரிஸிற்கு விடுத்துள்ள அழைப்பு. மார்ச் மாதத்தில் வாஷிங்டன் வருமாறு அமைச்சர் பீரிஸ் அழைக்கப்பட்டிருக்கின்றார்.




இந்த இரண்டு விடயங்களிலுமுள்ள செய்தி மிகவும் கடுமையானது. ஜெனிவா மாநாட்டில் இலங்கை பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப்போகின்றது என்பது இதன் மூலம் தெளிவாகியிருந்தது. அமெரிக்காவின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் போது பிரித்தானியா, கனடா போன்ற மேற்கு நாடுகளும் அதற்கு ஆதரவளிக்கும். இந்தப் பின்னணியில் அதேபோன்ற ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான நிர்ப்பந்தம் இந்தியாவுக்கும் ஏற்படும். கொழும்பிலுள்ள மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள் வெளியிடும் கருத்துக்களின்படி இந்தப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்ற எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருப்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது.

ஆக, ஜெனிவாவில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடி ஒன்று காத்திருப்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிதான் இரண்டாவதாக உள்ளது. அதாவது அமெரிக்கா கையளித்துள்ள கடிதத்தின் இரண்டாவது பகுதி. அதாவது 1. நல்லிணக்கம். 2. பொறுப்புக் கூறல் 3. வடமாகாண சபைத் தேர்தல் ஆகிய மூன்று விடயங்களிலும் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்படுமாயின் ஜெனிவாவில் உருவாகக்கூடிய நெருக்கடியின் தீவிரம் மட்டுப்படுத்தப்படும். அமெரிக்கா கொடுத்துள்ள செய்தியில் மறைமுகமாக இந்த அர்த்தமும் பொதிந்திருப்பதை உணர முடிந்தது.

நல்லிணக்கம் என்று சொல்லும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் தற்போது நடத்தும் பேச்சுக்களையே பிரதானமாகக் குறிப்பிடுகின்றது. ஆனால், இதனைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமாக நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் இடம்பெறுவதாகக் காட்டிக்கொள்ள அரசு இப்போது முற்படுகின்றது. அதனால்தான் இந்தத் தெரிவுக்குழுவை அமைப்பதில் அசாதாரண அவசரம் அண்மைக் காலத்தில் காட்டப்படுகின்றது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இதில் பங்குபற்றச் செய்வதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பகிரதப் பிரயத்தனங்களின் பின்னணியிலுள்ள இரகசியமும் அதுதான். கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளும் நிலையில் நல்லிணக்கம் தொடர்பில் சர்வதேசத்தை சமாதானப்படுத்தக்கூடிய எதனையும் முன்வைக்க முடியாத நிலை கொழும்புக்கு ஏற்படலாம்.

இந்தப் பின்னணியில்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் செல்லுமாறு கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்கியிருந்தமை கவனிக்கத்தக்கது.

இரண்டாவதாகவுள்ள பொறுப்புக்கூறலைப் பொறுத்தவரையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் கூறிக்கொள்ள முற்படுகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தன்னுடைய சுதந்திர தின உரையிலும் இதனைத்தான் தெரிவித்திருந்தார். இருந்த போதிலும் இதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்போவதில்லை என முதலில் கடுமையாகத் தெரிவித்த அரசு, இப்போது அந்த நிலையிலிருந்து இறங்கிவரவும் தயாராக இருப்பது போலத் தெரிகின்றது.

மூன்றாவதாகக் குறிப்பிடப்படும் வடமாகாண சபைக்கான தேர்தலைப் பொறுத்தவரையில் காலத்தைக் கடத்துவதுதான் அரசின் உத்தியாகவுள்ளது. இந்தத் தேர்தலை அரசு எப்போதோ நடத்தியிருக்க முடியும். இதற்கான தேர்தலை நடத்தினால் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால், தமக்குச் சாதகமான நிலை இல்லை என்பதால் மட்டும் அரசு காலத்தைக் கடத்தவில்லை. வடமாகாண சபை உருவாக்கப்பட்டால் வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ மயமாக்கல் போன்றன பாதிக்கப்படும் என அரசு சிந்திக்கின்றது. அதாவது வடக்கின் முகத்தையே மாற்றியமைப்பதுதான் அரசின் திட்டம். மாகாண சபை ஒன்று அங்கு அமைக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்கு அது போனால் அரசின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது சாத்தியமற்றதாகலாம்.

அதனால்தான் தற்போதைய நிலையில் தேர்தலை நடத்தி வடமாகாணத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கொடுத்துவிட அரசு விரும்பவில்லை. அத்துடன் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறுமாயின் அது கூட்டமைப்பைப் பலப்படுத்துவதாகவும் அமைந்துவிடுவதுடன், கூட்டமைப்புக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரத்தைக் கொடுப்பதாகவும் அமைந்துவிடும் என்பதும் அரசுக்குத் தெரியும்.

இந்தப் பின்னணியில் அமெரிக்கா குறிப்பிட்டிருக்கும் விடயங்கள் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுப்பதாக அமைந்திருக்கும் என்பது உண்மை. விருப்பமில்லாத சிலவற்றை செய்யாவிட்டால் நெருக்கடி தவிர்க்க முடியாமல் போகலாம். இந்த நிலையில்தான் ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாக முன்னதாகவே அமெரிக்காவுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸை அனுப்பி நிலைமைகளை சமாளிக்க ஜனாதிபதி திட்டமிடுவதாகத் தெரிகின்றது. ஆபிரிக்க மற்றும் இலத்தின் அமெரிக்க நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு ஜெனிவா செல்வதை விட நேரடியாக அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு ஜெனிவா செல்வது பாதுகாப்பானது என கொழும்பு நினைப்பதும் தெரிகின்றது.




R.R. Ajai Silks
4 Ave en Pierre et Marie Cutie
93150 Le Blance Mesnil
அனார்க்கலி, பஞ்சாபிகள், சுடிதார், காக்கறாச்சோலி, சீக்குயின்ஸ் சாறி, சிறுவர் சிறுமிகளுக்குரிய ஆடைகள், திருமணபட்டுப்புடவைகள், பட்டுவேட்டிகள், இமிரேசன் நகைகள், காப்புக்கள் அன்பளிப்புப் பொருட்களுக்கு நாடுங்கள்.
Tel/Fax: 01 49 47 83 17
R.R. AJAI SILKS
ஆர்.ஆர்.அஜெய் சில்க்ஸ்
RETOUCHES
தையலகம்
RETOUCHERIE
COUTURE SUR MESURES
TUNIQUE & SARI INDIENS
TRANSFORMATION & RETOUCHES
Tous Vêtements
POUSSEZ
HORAIRES
OUVERT 7J/7
10H à 20H
-40%
SOLDES
-30%




அல்லிராணி ஆண்ட அரசு இலங்கையில் இருந்தது என்பது இலக்கிய வரலாறு. அருச்சுனன் தீர்த்த யாத்திரை வந்து அல்லி ராணியால் சிறை பிடிக்கப்பட்டு பின்னர் அவளையே மணந்தான் என்பது கதை.

எனவே இன்றும் இலங்கையில் அல்லி ஆட்சி நடக்கிறது என்றால் யாரும் ஆச்சரியப்படத் தேவை இல்லை. வெளியாகி உள்ள செய்தி ஒன்றின்படி மகிந்தர் தமது செயலாளர் லலித் வீரதுங்காவை நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக பிரதமரின் செயலாளராக இருக்கும் அமரசேகராவை நியமிக்கும் முயற்சியை அவரது பாரியார் சிராந்தி ராஜபக்ஷ முறியடித்துள்ளார்.

இதனால் ஜனவரி 17ல் இடம்பெற இருந்த அமைச்சரவை மறு சீரமைப்பும் பின்போடப் பட வேண்டியதாயிற்று என்கிறது அந்தச் செய்தி. லலித் வீரதுங்க மகிந்தரின் உறவினரும் நெருங்கிய நண்பராக இருந்தும் கூட அல்லி ராணிக்கு அவர் மேல் ஒரு கோபமாம்.

இத்தனைக்கும் சிராந்தி நெடுஞ்சாலைகள் அமைச்சின் பொறுப்பதிகாரியாக இருந்த பொழுது அமரசே-கரா அந்த அமைச்சின் செயலாளராக இருந்துள்ளார். எனவே அவரது வருகை பிரச்சினையாக இருக்க முடியாது. ஆனால் வத்திக்கானுக்குப் பாப்பரசரைப் பார்க்கப் போன இடத்தில் லலித் வீரதுங்கமீது ஏற்பட்ட கோபத்தால் அவரைப் பல முறை இடம் மாற்றக் கேட்டுவந்துள்ளார்.

ஆனால் மகிந்தர் பிரதமராக இருந்த பொழுது சுனாமி நிதி மற்றும் அம்பாந்தோட்டை உதவி நிதி என்பவற்றில் எதிர்நோக்கிய மோசடிக் குற்றச் சாட்டுகள் பற்றிச் சந்திரிகா நியமித்த விசாரணைகளில் இருந்து காப்பாற்றிய லலித் வீரதுங்காவை கைவிட மகிந்தர் மறுத்துவிட்டார்.

லலித் வீரதுங்காவை பதவி விலகல் கடிதம் கொடுக்கச் செய்ய மகிந்தர் தமது மேலதிகச் செயலர் காமினி செனரத் மற்றும் பா.உ. சஜின் வாஸ் குணவர்த்தன மூலம் எடுத்த இரண்டு முயற்சிகளும் பலனற்றுப் போய்விட்டன. எனவே மகிந்தர் லலித்தை தாமாக விலகிச் செல்லவைக்கும் வழியைக் கடைப்பிடிக்கத் தொடங்கி உள்ளாராம்.

ஏற்கனவே இதே முறையைப் பின்பற்றிப் பணமுறிகள் மற்றும் நாணயமாற்று ஆணையத்தின் தலைமைப்பதவி வகித்த லலித்தின் மனைவி இந்திராணி சுகத தாசா வெளியேற வைக்கப்பட்டாராம். அமைச்சரவை மறு சீரமைப்பு வேலையை லலித்திடம் விடாது மேலதிகச் செயலர் செனரத்திடமும் திறைசேரிச் செயலர் கலாநிதி பி.பி. ஜயசுந்தரவிடமும் விடப்பட்டுள்ளதாம். பாவம் லலித் வீரதுங்க. கழுத்தைப் பிடிச்சுத் தள்ளினால்தான் போக வேண்டுமோ.

# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Tellstr. 31/ Ecke Militärstr. 106
8004 Zürich

உலக ஓட்டத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளிலும் நவீன கணனி முக்கியம் என்பதை நாம் அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550 PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**

# return'IT

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

www.pckaufen.ch



CHF 110.- inkl. MwSt.

**DELL Precision 380**
Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber

**HP DC7700**
Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz

CHF 120.- inkl. MwSt.



**HP Compaq NC8430**
15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler

CHF 270.- inkl. MwSt.



**HP Compaq 8510W**
Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*

CHF 360.- inkl. MwSt.



## !! REPARATUREN ALLER MARKEN !!

## für Neuware besuchen Sie WWW.PAGEVISION.CH

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

சினிமா ▶

## இளையராஜா

இசைஞானி இளையராஜாவை தற்பொழுது அடிக்கடி பல நிகழ்ச்சிகளில் காண முடிகின்றது. பொதுவாக இசைஞானி இப்படி நிகழ்ச்சிகளில் தோன்றுவது இல்லை. தான் இசை அமைத்த பட நிகழ்ச்சிகளுக்கு கூட அவர் வருவது இல்லை.
தற்பொழுது அதில் ஒரு மாற்றம். தொடர்ச்சியாக கலந்து கொள்கிறார். அடிக்கடி தொலைக்காட்சிகளிலும் பார்க்க கூடியதாக இருக்கின்றது.

டிசம்பர் கடைசியில் "என்றென்றும் ராஜா" என்கின்ற பிரமாண்டமான இசை நிகழ்ச்சியை ஜெயா ரீவி ஒளிபரப்பியது. இசைஞானி கலந்து கொண்டு மிகச் சிறப்பான இசை நிகழ்ச்சியை வழங்கியிருந்தார். சில நாட்கள் கழித்து கலைஞர் தொலைக்காட்சியில் "மயிலு" படத்தின் இசை பற்றிய நிகழ்ச்சி ஒளிபரப்பானது.

அதன் பிறகு "செங்காத்து பூமியிலே" படத்தின் இசை வெளியீட்டு நிகழ்வும் பல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. அதிலும் இளையராஜா கலந்து கொண்டார். பின்பு சில நாட்கள் கழித்து "விஜய்" தொலைக்காட்சியில் "தோனி" படத்தின் இசை வெளியீட்டு விழா நடந்தது. அங்கும் இளையராஜா கலந்து கொண்டு பேசினார்.

இப்படி தொடர்ச்சியாக இசைஞானியின் படங்கள் வெளியாவதும், அவர் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் இளையராஜாவின் ரசிகர்களுக்கு இனிப்பான செய்தியாகும்.

கவுதம் மேனன் இயக்குகின்ற "நீதானே என் பொன்வசந்தம்" என்கின்ற படத்திற்கும் இளையராஜாதான் இசை அமைக்கின்றார் என்று சொல்லப்படுகிறது. இதுவரை ஹரீஸ் ஜெயராஜை பல படங்களிற்கும், ஏஆர் ரஹ்மானை "விண்ணைத் தாண்டி வருவாயா" படத்திற்கும் பயன்படுத்திய கவுதம் மேனன் முதன் முதலாக இளையராஜாவோடு இணைய இருப்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

சில மாதங்களுக்கு முன்புதான் இசைஞானி தன்னுடைய அன்பு மனைவியை இழந்திருந்தார். இந்தச் சோகத்தில் இருந்து இசைஞானி எப்படி மீளப் போகிறார் என்கின்ற அச்சம் பலருக்கு இருந்தது. இசைஞானி தொடர்ச்சியாக படங்களுக்கு இசை அமைப்பதன் மூலமும் பல இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலமும் தன்னுடைய சிந்தனை முழுவதையும் இசையின் பக்கம் திருப்பி தன்னை ஆறுதல் படுத்த முனைகிறார் போல் இருக்கிறது.

எப்படி இருப்பினும் அவருடை பாடல்களை கேட்பதற்கு காத்திருப்பவர்களின் ஏக்கம் இந்த ஆண்டு தீரட்டும்.

# இந்த ஆண்டில் இசை



## யுவன், ஹரீஸ், ஜி.வி

கடந்த சில ஆண்டுகளாகவே உண்மையான போட்டி இந்த மூவருக்கும்தான். இளைஞர்களால் பெரிதும் விரும்பப்படும் இசையமைப்பாளர்களாக யுவன் சங்கர் ராஜா, ஹரீஸ் ஜெயராஜ், ஜிவி பிரகாஸ்குமார் ஆகிய மூவரும் திகழ்கிறார்கள்.

2011இல் யுவன் சங்கர் ராஜா இசை அமைத்த மங்காத்தா திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது. வானம், அவன் இவன் போன்ற படங்களின் பாடல்களும் பேசப்பட்டன.

ஹரீஸ் ஜெயராஜின் இசையில் "எங்கேயும் காதல்", "ஏழாம் அறிவு", "கோ" போன்ற படங்கள் வெளியாகின. பாடல்களும் நல்ல வரவேற்பை பெற்றிருந்தன. "கோ" படம் வெற்றி பெற்றதோடு பாடல்களும் பெரும் வரவேற்பை பெற்றன.

ஜிவி பிரகாஸ் இசை அமைப்பில் மயக்கம் என்ன, தெய்வத் திருமகள் போன்ற படங்கள் வெளியாகின. பாடல்களுக்கும் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஹரீஸ் ஜெயராஜ் இசை அமைத்த நண்பன் படம் வெளியாகி பாடல்கள் வரவேற்பை பெற்றிருக்கின்றன. சூர்யாவின் நடிப்பில் "மாற்றான்" என்கின்ற படமும் விரைவில் வர இருக்கின்றது.

# Kollywood Music 2012





யுவனின் இசையில் தங்கமீன்கள், பில்லா2, வேட்டைமன்னன், ஆதிபகவான், சமரன் போன்ற படங்கள் வெளிவர இருக்கின்றன. அனைத்துமே எதிர்பார்ப்பு மிக்க படங்கள்.

ஜீவீ பிராகாஸ் இசை அமைப்பில் சகுனி, அன்னக்கொடியும் கொடிவீரனும், கரிகாலன், வடசென்னை போன்ற படங்கள் இந்த ஆண்டில் வெளவர உள்ளன. இவைகளும் எதிர்பார்ப்பில் உள்ள படங்களே.

படங்கள் வெற்றி பெற்றால் மட்டுமே இசை கவனிக்கப்படுகின்ற ஒரு நிலை கடந்த பல ஆண்டுகளாகவே நிலவி வருகின்றது. படம் வெளிவராமலேயே அதனுடைய பாடல்கள் வெளிவந்து மக்கள் மனதில் இடம் பிடிக்கின்ற நிலைமை இளையராஜா உச்சத்தில் இருந்த காலத்தில் இருந்தது. அது ஒரு காலம்.

ஆகவே இந்த மூவரும் இசை அமைக்கும் படங்கள் வெற்றி பெறுவதை பொறுத்தே பாடல்களின் வெற்றியும் அமையும்.

உண்மையில் கடந்த இரு ஆண்டுகளாக ஜீவீ பிரகாஸ் குமார் யுவன் சங்கர் ராஜாவிற்கு நல்ல ஒரு போட்டியைக் கொடுத்து வருகிறார். "பூக்கள் பூக்கும் தருணம்", "ஒத்த சொல்லால", "யாத்தே யாத்தே", "காதல் என் காதல்" என்று அவர் போடுகின்ற பாடல்கள் இளைஞர்களுக்கு மிகவும் பிடித்துப் போகின்றது.

ஆனால் யுவனிடம் இருந்து "ஒரு சொல் ஒரு கண்ணாடி", "என் காதல் சொல்ல வார்த்தையில்லை", "கண்ணோரம் காதல் வந்தால்" போன்ற பாடல்கள் கடந்த ஆண்டு வெளியாகிவில்லை. ஆதற்கு ஏற்ற படங்களும் அமையவில்லை.




ஆரம்பத்தில் ஆண்டுக்கு இரண்டு, மூன்று தமிழ் படங்கள் ஏஆர் ரஹ்மான் இசை அமைப்பில் வெளியாகிக் கொண்டிருந்தன. இப்பொழுது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஏர்ஆர் ரஹ்மான் இசை அமைப்பில் படங்கள் வெளியாகின்றன.

2009இல் ஏஆர் ரஹ்மான் இசை அமைத்த எந்தத் தமிழ் படமும் வெளிவரவில்லை. ஆயினும் 2010இல் "ராவணன்", "விண்ணைத் தாண்டி வருவாயா", "எந்திரன்" என்று மூன்று படங்கள் ஏஆர் ரஹ்மானின் இசையோடு வெளியாகி அந்தக் குறையை போக்கியது. ஆனால் 2011இல் ஏஆர் ரஹ்மான் இசை அமைத்த படங்கள் எதுவும் வெளியாகவில்லை.

இது ஏஆர் ரஹ்மான் தவறு மட்டும் அல்ல, அவர் இசை அமைக்கின்ற படங்களின் இயக்குனர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளாக ஒரு படத்தை இழுத்தடித்து இயக்குகின்ற ஷங்கர், மணிரத்தினம் போன்றவர்களாக இருக்கின்றார்கள்.

அத்தோடு சில ஹொலிவூட் படங்களுக்கு இசை அமைப்பதோடு, தனியான ஆல்பங்களும் செய்வதால் தமிழ் படங்களுக்கு நேரம் ஒதுக்குவதும் ஏஆர் ரஹ்மானுக்கு பிரச்சனையாகவே இருக்கின்றது.

தற்பொழுது ரஜினிகாந்த் நடிக்கின்ற "கொச்சடையான்", மணிரத்தினம் இயக்குகின்ற "கடல்", கவுதம் மேனன் இயக்கி விஜய் நடிக்கின்ற "யோகான் - முதலாவது அத்தியாயம்" போன்ற படங்களுக்கு இசை அமைத்து வருகின்றார்.

இதிலே "யோகான் - முதலாவது அத்தியாயம்" 2013இல் வெளிவரும் என்று சொல்லப்படுகின்றது. கொச்சடையான் மற்றும் கடல் ஆகியனவே இந்த ஆண்டு வெளிவரும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இவைகளும் பிந்துவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

அப்படி நடந்தால் ஏஆர் ரஹ்மான் ரசிகர்கள் அவருடைய தமிழ் பாடல்களை கேட்பதற்கு 2013வரை காத்திருக்க வேண்டி வரும்.



# போராளியும், போராட்ட வாழ்க்கையும்!

ஆர். தயாபரன்

நேசராசா கரோலின் மரணிக்கும் தறுவாயினில் அவளுக்கு வயது வெறும் 23 மட்டுமே. ஏதும-றியா அவளது பச்சிளங்குழந்தைக்கு வெறும் ஒன்றரை வருடங்களே. புலம்பெயர் தேசங்களில் அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட நிலையில் எதிர்காலத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் பல-ரினுள் கரோலினும், அவளது பச்சிளங்குழந்தையும் இருந்தார்கள், ஆனால் கடந்த ஜனவரி 18ம் திகதியுடன் அவ்வாறாக காத்திருப்பவர்கள் பட்டியலில் அவர்கள் இருவருமில்லை, அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட நிலையில் சொந்த ஊர் திரும்புவதிலுள்ள அச்சம் எதிர்காலம் தொடர்பாக கொண்டுள்ள பயம், அவளை தீயுடன் எரியுண்டுபோக வழிகோலியுள்ளது. எதுவுமே அறியாத அந்த பச்சிளங்குழந்தையும் கருகி-யேபோனது.

நோர்வே மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்துவதாக கரோலினதும், அவளது குழந்தையினதும் மரணம் அமைந்திருக்கின்றது. புலம்பெயர் தேசங்களில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் இலங்கை திரும்புவதிலுள்ள அச்சத்தையும் அது வெளிப்படுத்தியே இருக்கின்றது. இனப்பிரச்சினை தொடர்பாகவும், சிறுபான்மையினரது உரிமைகள் தொடர்பாகவும், கவலை கொள்ளும் மேற்குலகு தனது சொந்த நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளவர்கள் பற்றி கண்டுகொள்ள மறுக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் பாவப்பட்ட கிராமங்களில் சாவற்காடும் ஒன்று. காக்கை தீவினை அண்டிய இச்சிறு கிராமத்தில் பெரும்பாலான குடும்பங்கள் மீன்பிடியை நம்பியவை. யுத்தம் தந்த விளைவுகளும், சட்டவிரோத மதுப்பாவனையும் சுமார் 30வீதமான பெண்களை இளம் வய-திலேயே விதவையாக்கியிருக்கின்றது. சமுக சீரமைப்புத் தொடர்பினில் கூடிய அக்கறை செலுத்தப்படவேண்டிய கிராமமாக சாவற்காடு கிராமம் உள்ளது.



அரசு - புலிகளுக்கிடையேயான மோதல்களையடுத்து, படையினால் தேடப்படுபவளாக விநோதா மாறியிருந்தாள். உறவினர், நண்பர்கள் வீடுகளினில் பதுங்கி தலைமறைவு வாழ்க்கை வருடக்கணக்கினில் நீடித்தது. உயிர் தப்பித்துக் கொள்ள ஏனையவர்களைப்போல உறவினர்கள் சிலரது உதவியுடன் நோர்வேயை வந்தடைந்திருந்தாள் விநோதா. ஆனாலும் நோர்வேக்கு அழைத்த ஏஜண்ட் காசு எனக் கூறி. சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக சம்பளம் எதுமின்றி வேலைசெய்ய அதே உறவினர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டது வேறு கதை.

குறித்த உறவினர்களுடன் முரண்பட்டு அகதி முகாமில் வாழ்ந்து கொண்டிருந்தவேளை, அவளது வாழ்வில் தென்றலாக வந்து சேர்ந்தான் அந்த குர்தீஸ் இளைஞன். மேற்குலக நாடுகளி-னில் திருமணமாகாமல் இணைந்து வாழ்வதும், திருப்தியில்லையென்றால் பிரிந்து செல்வதும் சாதாரணமானதே. அவ்வகையினில் அவளை குழந்தையொன்றிற்குத் தாயாக்கிவிட்டு அந்த குர்தீஸ் நாட்டவன் கண்காணாமல்போயிருந்தான், ஆனாலும் அவனது பிரிவு கரோலினாக மதம் மாறிக் கொண்டிருந்த வினோதாவால் முடியாதவொன்றாகவே இருந்தது.

கரோலினாவின் சொந்தப்பெயர் விநோதா. மானிப்பாயிலுள்ள முன்னணி மகளிர் பாடசா-லையில் 2003ம் ஆண்டு காலப்பகுதியில்



கல்வி கற்று வந்திருந்தார். தந்தைக்கும் தாயாருக்குமிடையே நிலவி வந்த குடும்பப்பிணக்கினால் விடுதலைப்புலிகள் அமைப்பினில் போராளியாக இக்காலப்பகுதியினில் அவள் இணைந்து கொண்டாள். ஆனால் ஆறு மாதம் கூட கடந்திராத நிலையில் தாய் மரணமாக வீட்டிற்க்குத் திரும்பியிருந்த அவள் பின்னர் புலிகளுடன் செல்ல விரும்பியிருக்கவில்லை, ஆனால் தன் சிறு குழந்தைக்காக போராட கரோலின் தயாராகவே இருந்தாள், மீண்டும் தொழிலுக்குப் செல்லத் தொடங்கினாள், மறுபுறத்தே தனக்கான நிரந்தர விசா அனுமதி கோரி அவள் போராடிக் கொண்டிருந்தாள், இதனிடையே ஊரிலிருந்து வந்த தங்கையின் மரணச் செய்தி அவளை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

நேசராசா மீரா வெறும் 14வயதினில் காதலித்துவனுடன் வீட்டைவிட்டு ஓடிப்போயிருந்தாள். 16வயதினில் ஓர் குழந்தைக்கு தாயாரானாள். 18வயதினை கடந்த அடுத்த நாளினில் நள்ளிரவினில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக அவள் மீட்கப்பட்டிருந்தாள். அது தற்கொலையா? அல்லது கொலையா? என்ற தீர்ப்பை நீதிமன்று இதுவரை வழங்கியிருந்கவில்லை, ஆனாலும் காதலனாக வந்து சேர்ந்து கணவனாகிப்போனவனின் சந்தேகப் பார்வையும், சித்திரவதைகள் பற்றியும் அயலவர்கள் விரிவாகச் சொல்கிறார்கள்.

இது கொலையா, தற்கொலையாவென முடிவெடுக்க சட்டவைத்திய அதிகாரிகளும் கூட அவகாசம் கோரியுள்ளனர். புறச்சூழலை வைத்தே தீர்மானிக்கவேண்டியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். தாயாரின் மரணமும் தந்தையின் குழப்பகரமான செயற்பாடுகளும் சிறுவயதில் பெண்பிள்ளைகளின் வழிதவறிய பயணத்திற்கு முக்கிய காரணமாக் அமைந்துவிட்டதென்பதே உண்மை. தனது ஆசை நாயகி ஒருத்தியை வீட்டிற்குக் கூட்டிவந்து தங்க வைத்ததே குழப்பங்களின் உச்ச காரணம் என கூறப்படுகின்றது.

தனது தங்கையின் 45ம் நாள் நினைவுநாளில் ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டுமென கோரி, கரோலின் வணக்கத்திற்குரிய மதகுருவொருவரூடாக அனுப்பிய பணம். இங்கு வந்து சேர்ந்திருந்த வேளை கரோலின் உயிரோடில்லை, மாலை தொலைபேசியூடாக தனது சகோதரனுடன் உரையாடுவதாக உறுதியளித்திருந்தது மட்டுமே கரோலினின் இறுதிப்பேச்சு.

அகதி அந்தஸ்த்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் ஏதுமறியாக தனது குழந்தையுடன் அவள் எடுத்த முடிவு இனிமேல் எந்தவொரு பெண்ணுக்கும் நடக்க கூடாது. பராயமடையாத 14வயதில் திருமணமாகி 18வயதினில் மரணித்துப்போகின்ற அவளது தங்கையின் அவலமும் எவருக்கும் வரக்கூடாததே. யுத்தம் ஓய்ந்து போனாலும் அது தந்துவிட்டுப்போன வலிகள் எம்மவர்களை துரத்திக் கொண்டேயிருக்கின்றது.



## ஆகாது...!

காயம் தரும் அன்பு
காதல் ஆகாது
மோசம் கொண்ட காதல்
பாசம் ஆகாது...!

## ஏன்...?

எட்ட இருக்கும் நிலவைக்
கட்டி இழுத்துவர நினைக்கிறது மனம்...,
தொடர்ந்து வரும் நிழலைத்
தொலைக்க நினைக்கிறது சினம்...!

## அமாவாசை நிலவு...

அமாவாசைக்குள் நிலவு...
கரிய கூந்தலுக்குள் ஒளிந்திருக்கும்
கன்னி உன் முகம்...!

# இறக்கை முளைத்த இதயம்...!

தொகுப்பு: தமிழ்விழி

## அகரக் கவிக்கூடம்...

### தீ...!

குளிர் தீயாய்க் காதல்
சாதாரணம்...
சுடும் தீயாய்க் காதல்
சதா ரணம்..!

### புன்னகைஈர்ப்பு

புவியீர்ப்பை விட - உன்
புன்னகைக்கு ஈர்ப்பு அதிகம்...
எங்கோ போன என்மனம்
இன்னமும் திரும்பவில்லை.

### அழகு...!

அழகிப்போட்டியில்
வென்றுவிட்டாள்
எவளோ ஒருத்தி....
உனது விண்ணப்பத்தின்
ஒரு நாள் தாமதத்தால்....!

### உண்மை

இரண்டு இதயங்களின் இணைவில்
பிறக்கிறது காதல்...,
இரண்டு இதயங்களின் பிரிவில்
வாழ்கிறது காதல்...!

அன்பிற்கினிய அகரம் வாசகர்களே...!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை, 3 - 6 வரிகளுக்கு
மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்..!
சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்படும்
கவிதைகள் அகரத்தின்
கவிதைத்தொடரில் பிரசுரிக்கப்படும்.

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany

eMail: poems@akaram.com



# லிபியா, ஆட்சி யார் கையில்?

பூமிபுத்திரன்

லிபியாவில் கடாபி ஆட்சி வீழ்த்தப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இன்னமும் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், இடைக்கால ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள புதிய அரசாங்கம் திணறி வருகின்றது. இந்த ஆயுதக் குழுக்கள் சட்டத்தை மதித்து நடப்பதற்குத் தவறுவது மாத்திரமன்றி தமக்கிடையே எழுகின்ற சிறு முரண்பாடுகளைக் கூட ஆயுத முனையிலேயே தீர்த்துக் கொள்ள முற்படுவதால் ஆயுத மோதல்களும், உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன. கடாபியின் ஆட்சிக்கு எதிராக ஒருகாலத்தில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள், இன்று ஆயுதக் குழுக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடாத்தும் நிலை உருவாகியுள்ளது.

இது தவிர, கடாபி ஆதரவாளர்களைப் பழிவாங்குதல் என்ற அடிப்படையில் இந்த ஆயுதக் குழுக்கள் மேற்கொண்டுவரும் அதீத வன்முறை நடவடிக்கைகள், கடாபி ஆதரவுக் குழுக்கள் புத்துயிர் பெறவும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கவும் காரணமாக உள்ளன.

லிபியாவில் கடாபி ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமான நாள் முதலாக இன்றுவரை கடாபியால் தனது ஆதரவாளர்களுக்கும், மேற்குலகினாலும், மத்திய கிழக்கு நாடுகளினாலும் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை கணக்கற்றது. கடாபியின் ஆட்சி முடிவிற்கு வந்ததும் இரண்டு தரப்பினருமே தமது ஆயுதங்களைச் சட்டபூர்வ அரசாங்கத்திடம் வழங்குவதற்குத் தயாராக இல்லை.

உத்தியோகப் பற்றற்ற கணக்கெடுப்புக்களின் பிரகாரம் லிபிய மக்களில் மூன்றிலொருவரிடம் சட்டவிரோத ஆயுதம் இருப்பதாகத் தெரிகின்றது. இத்தகைய ஆயுதங்களைக் களைவது எவ்வாறு எனத் தெரியாத நிலையில் புதிய அரசாங்கம் திணறி வருகின்றது. இந்நிலையில், லிபியாவில் யாருடைய ஆட்சி நடைபெறுகின்றது என்பதை வரையறை செய்துவிட முடியாத நிலையே உள்ளது. லிபியாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. மக்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது என முன்னர் வாய்கிழியக் கத்திய மேற்குலகம் தற்போது இவை எதனையுமே கண்டு கொள்ளாமல் மௌனம் காத்து வருகின்றது.

தற்போதைய நிலையில், ஒருசில மனித உரிமை அமைப்புக்கள் லிபியாவில் நடைபெறும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல்தந்து வந்தாலும் அவை சம்பிரதாய பூர்வமானவையாகவே உள்ளன. பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்ட எல்லைகளற்ற மருத்துவ அமைப்பு மிஸ்றாற்றா பகுதியில் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்தே, லிபியாவில் கடாபியின் ஆதரவாளர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சுமார் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களின் பரிதாபநிலை குறித்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

எல்லைகளற்ற மருத்துவ அமைப்பு ஆயுதமோதல்கள் நடைபெறும் இடங்களில் மருத்துவப் பணிகளை மேற்கொள்வது உலகறிந்த உண்மை. லிபியாவில் கடந்த பெப்ரவரியில் கேணல் கடாபிக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமான பொழுது உதவிக்கரம் நீட்டிய சர்வதேச நிறுவனங்களுள் அதுவும் ஒன்று. யுத்தத்தில் சிக்கிக் காயமடைந்த கிளர்ச்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மருத்துவ உதவிகளை நல்கிவந்த இந்த அமைப்பு, தற்போது மருத்துவ உதவி தேவைப்படும் ஏனையோருக்கு அத்தகைய உதவியை நல்கி வருகின்றது.

இந்நிலையில், மிஸ்ராற்றா பகுதியில் பணியாற்றிவரும் அந்த அமைப்பின் தொண்டர்களுக்கு, தம்மிடம் சிகிச்சை பெறும் ஒருசிலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதாகவும், அவ்வாறு கொண்டுவரப்படுபவர்கள் சிகிச்சையின் பின்னர் மீண்டும் சித்திரவதைகளுக்கு இலக்காகுவதாகவும் எழுந்த சந்தேகங்களை அடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் பின்னரே தனது பணியை இடைநிறுத்தும் அறிவிப்பை எல்லைகளற்ற மருத்துவ அமைப்பு வெளியிட்டது.

இன்றைய நிலையில் லிபியாவில் ஆயிரக்கணக்கான நபர்கள், கடாபி ஆதரவாளர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் கொடூரமான சித்திரவதைகளுக்கும் பழிவாங்கல்களுக்கும் இலக்காகி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி நவநீதம்பிள்ளையின் அறிக்கையின் பிரகாரம் சுமார் 8500 கைதிகள் 60 தடுப்பு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், சுயாதீன தகவல்களின்படி இந்தத் தடுப்பு மையங்களினதும், கைதிகளதும் எண்ணிக்கை மேலும் அதிகமாகவே இருக்கும் எனத் தெரிகின்றது.



கடாபி ஆதரவாளர்கள் மற்றும் கடாபி சார்பில் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்படும் ஏனைய ஆபிரிக்க நாடுகளின் கறுப்பினத்தவர்கள் எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தடுப்பு மையங்களில் என்ன நடைபெறுகின்றது என்பதை லிபிய அரசினால் கூட அறுதியிட்டுக் கூறமுடியாமல் உள்ளது. அங்கே மனித உரிமைகள் பேணப்படுகின்றனவா, சர்வதேச நியமங்களுக்கு அமைய கைதிகளுக்கு வசதிகள் வழங்கப் படுகின்றனவா, அவர்களது உறவினர்களுக்கு அவர்களது கைது மற்றும் தடுத்துவைப்பு தொடர்பில் முறையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளனவா, உறவினர்கள் அவர்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனரா, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற கைதிகளின் நலன்களில் அக்கறை கொண்ட பன்னாட்டு மனிதநேய நிறுவனங்கள் அவர்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனவா, தங்களது சட்டத்தரணிகளோடு தொடர்புகளைப் பேண கைதிகளுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளதா போன்ற கேள்விகளுக்கு முறையான விடை இல்லாத நிலையே உள்ளது. ஏனெனில், இந்தச் சட்டவிரோத தடுப்பு மையங்கள் முழுக்க முழுக்க ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கடாபியை முறியடிக்கத் தங்களால் மாத்திரமே முடிந்தது என்ற கர்வத்துடன் செயற்பட்டுவரும் இக்குழுக்கள் யாருடைய கூற்றையும் செவிமடுக்கத் தயாராக இல்லை. இத்தகைய குழுக்களின் தயவிலேயே ஆட்சியை நடாத்த வேண்டிய நிலையில் உள்ள அரசினால் அவர்களைத் தட்டிக் கேட்கவும் முடியவில்லை. இதனால் இந்த ஆயுதக் குழுக்கள் தமது மனம்போன போக்கில் செயற்பட்டு வருகின்றன.

கடாபி ஆதரவுப் படைகளினால் பல மாதங்கள் முற்றுகைக்குள் இருந்த நகரம் மிஸ்ராற்றா. இந்த நகருக்குத் தெற்கே 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கிராமம் ரவேர்கா. முன்னாள் அடிமைகளான 30,000 கறுப்பினத்தவர்கள் வசித்த இந்தக் கிராமத்திலிருந்தே கடாபி ஆதரவுப் படைகள் தமது முற்றுகைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இன்று இந்தக் கிராமம் மக்கள் எவரும் இன்றி வெறிச்சோடிப் போய் உள்ளது. வீடுவாசல்கள் யாவும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் இம்மக்கள் யாவரும் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். மக்கள் எவரும் திரும்பி வந்துவிடக் கூடாது என்பதற்காக இங்கே ஆயுதக் குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தமது நகரின் முற்றுகைக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பதற்காக வீட்டைவிட்டு அடித்து விரட்டப்பட்டதோடு இம்மக்களின் துயரம் முடிந்துவிடவில்லை. செல்லும் இடமெல்லாம் அந்த மக்கள் வேட்டையாடப்படும் நிலையே தொடர்கின்றது. பல்வேறு அகதி முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இம்மக்கள் அங்கும்கூடத் துன்புறுத்தப்படுகின்றனர்.

அண்மையில், தலைநகர் திரிப்பொலிக்கு அருகே உள்ள அகதிமுகாமொன்றில் இளைஞர் ஒருவரைக் கைதுசெய்யச் சென்ற ஆயதக்

குழுவினருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட அக் கிராம மக்கள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். மிஸ்றாற்றா ஆயதக் குழுவினரே இந்தக் கொடூரத்தைப் புரிந்துள்ளனர்.

சர்வதேச கண்டனங்கள் எழுந்துள்ள நிலையிலும், இந்தக் கொடூரத்துக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. ஏனெனில், கடாபிக்கு எதிரான கிளர்ச்சியில் பாரிய பங்களிப்பை வழங்கியிருந்த மிஸ்றாற்றா, பெங்காஸி மற்றும் ஸின்ரான் நகர ஆயதக் குழுக்களை மீறி எதுவும் செய்துவிட முடியாத நிலையில் புதிய அரசாங்கம் உள்ளது.

மிஸ்றாற்றா நகர் கடாபிக்கு எதிரான போரட்டத்தில் அதிக சேதத்தைச் சந்தித்த நகரம். அதேவே-ளை, கடாபியைக் கைது செய்து கொன்றதும் அவரது மகன்களுள் ஒருவரைக் கொன்றதும் இந்த நகரப் படைகளே. பெங்காஸி நகரமே முதலாவதாக விடுதலைபெற்ற நகரம். கிளர்ச்சியாளர்களின் இடைக்காலத் தலைநகராகவும் இதுவே விளங்கியது. அதேவேளை, சிறிய ஆயுதக்குழுவானாலும் ஸின்ரான் ஆயுதக்குழு தீரமுடன் போராடியது மட்டுமன்றி, கடாபியின் மறைவின்பின் எஞ்சியிருந்த அவரது மகனான ஸய்ப் அல்-இஸ்லாமைக் கைது செய்து வைத்துள்ளது. அத்துடன் கேந்திர முக்கியத்துவம் மிக்க திரிப்பொலி விமான நிலையத்தைக் கட்டுப்பட்டுக்குள் கொண்டு வந்ததும் இப்படைப்பிரிவே.



லிபியாவைப் பொறுத்தவரை சிறிதும் பெரிதுமாக சுமார் 300 ஆயதக்குழுக்கள் உள்ளன. இவற்றின் உறுப்பினர்களாக சுமார் 150,000 ஆயததாரிகள் உள்ளனர். இவர்களின் ஆயதங்களைக் களையவும், ஆயுதப் படைகளிலும் காவற்துறையிலும் இணைந்து கொள்ள விருப்பமானோரை இணைத்துக் கொள்ளவும் அரசு முயற்சி செய்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

இதுவரை, சுமார் ஆயிரம் பேர் வரையானோரே உள்துறை அமைச்சில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். அதேவேளை, புதிய இராணுவத் தளபதியாக அறிவிக்கப்பட்டுள்ள 1999 வரை கடாபியின் இராணுவத்தில் கேணல் தரத்தில் பணியாற்றிய யூசுப் மன்குஷ் என்பவரை ஏற்றுக் கொள்ள முடியா-தென இரண்டு ஆயுதக் குழுக்கள் ஏற்கனவே அறிவித்தும் உள்ளன.

இந்நிலையில் தலையிடி போய் திருகுவலி வந்த கதையாக புதிய அரசாங்கத்தின் நிலை உள்ளது.

உள்நாட்டில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தத் திராணியில்லாத நிலை-யில் திணறிவரும் புதிய அரசாங்கம், இவை தொடர்பில் சர்வதேச ரீதியில் எழுப்பப்படும் குற்றச் சாட்டுக்களுக்குப் பதில்கூற வேண்டிய நிலையிலும் உள்ளது. மறுபுறம், ஜனநாயகத்தை வேண்டி நிற்கும் மக்களைத் திருப்திப்படுத்தும் வழிவகைகள் தெரியாமலும் விழிபிதுங்கி நிற்கின்றது.

அரசாங்கத்தால் அண்மையில் அறிமுகஞ் செய்யப்பட்ட தேர்தல்கள் சட்ட வரைபில் பெண்களுக்கு சமமான இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து புரட்சியின் மையம் என வர்ணிக்கப்படும் பெங்காஸி நகரில் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையின் போது இடைக்கால அரசுத் தலைவர் அப்துல் ஜலீல் அவர்களின் வாகனத்துக்கு மக்கள் தீ வைத்திருந்தமை கடாபியின் பின்னான லிபியா எந்தத் நிலையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அதேநேரம், கடாபியின் மறைவின் பின்னரும் புதிய அரசாங்கத்துக்குச் சவாலாக விளங்கிய பானி வலீட் நகரில் ஏற்பட்ட மோதலில் கடாபி ஆதரவுப் படையினர் அதிரடியாக அந்நகரை மீளக் கைப்பற்றியிருந்தமையும் புதிய அரசின் அதிகாரத்தைக் கேள்விக்கு இலக்காக்கியிருந்தது.

மறுபுறம், கடாபி ஆட்சியில் ராஜதந்திரியாகப் பணியாற்றிய ஒமர் பிறேபெஷ் என்பவர் ஸின்ரான் ஆயுதக்குழுவினரால் ஜனவர் மாதம் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்து கொல்லப்பட்ட சம்பவமும் அரசுக்குப் பாரிய சங்கடத்தைத் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யதார்த்தநிலை இவ்வாறு இருக்கையில் இவற்றைக் கண்டு கொள்ளாமல் விடுவதே சிறந்தது என் கேணல் கடாபிக்கு எதிராகக் கச்சை கட்டிய சக்திகள் இருப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஏனெனில், லிபியாவின் எண்ணை வளத்தைப் பங்குபோடுவது என்ற அவர்களின் பிரதான இலக்கு நிறைவேறிய பின்னர் லிபிய மக்கள் என்னவானாலதான் அவர்களுக்கு என்ன?

கடாபிக்கு எதிராக மேற்குலகம் பலப்பிரயோகம் செய்து ஆட்சிமாற்றத்துக்கு எத்தனித்த போது, கடாபியின் பின்னான லிபியா தற்போதைய ஈராக்கை விடவும், ஆப்கானிஸ்தானை விடவும் மோசமானதாக மாறும் என எச்சரிக்கைகள் விடப்பட்டிருந்தன. அப்போது இதனைக் காதில் போட எவரும் தயாராக இருக்கவில்லை. ஆனால், இன்று லிபியாவில் இருந்து வெளிவரும் சமிக்ஞைகள் அன்று விடுக்கப்பட்ட எச்சரிக்கை மெய்ப்பிக்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதையே கூறி நிற்கின்றன.



# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

பாகம் 1



பலருக்குத் தனித் தமிழ் ஈழம் சாத்தியமா? எதற்கு வீண் வம்பு? சிங்களம் தருவதை பெற்றுக் கொண்டு பின்னால் ஏதோ பார்க்கலாமே என்ற குழப்ப வாதங்களும் சிந்தனைகளும் பரவலாக இருப்பதைக் காண முடிகிறது. இத்தகைய குழப்பம் பற்றிய தேவை, நன்மை தீமை பற்றிப் பார்க்கவே இவ் வரலாற்றுத் தொடர் வருகிறது. வாசகர் தமது பிரதி வாதங்களையோ, கண்டனங்களையோ, கருத்துகளையோ கடிதம் கட்டுரை போன்ற முறையில் தெரிவிக்கலாம். ஒரு கண்ணியமான கருத்தாடல் களமாகக் கூட வாசகர் பயன் படுத்தலாம். குழப்ப முயலும் பேர்வழிகளால் குழம்பி இருக்கும் பேர்வழிகளுக்கும் தெளிவு பெற இந்தக் களம் உதவும்.

முதலில் ஏன் தனித் தமிழ் ஈழம் வேண்டும்? என்ற கேள்விக்கான பதிலைக் காணக் கட்டம் கட்டமாக நாம் ஆய்வு செய்வோம். உலகில் 35 நாடுகள் எம்முடன் எந்த வித முன் விரோதம் இல்லாமலே 15 ஆண்டுகளுக்கு மேலாகத் தனி அரசு அமைத்துச் சட்டம், ஒழுங்கு, நீதி, கொடி, படை எனும் அரசுக்கான அடிப்படை ஆதாரக் கட்டமைப்புகள் அனைத்தும் கொண்டிருந்த எமது ஆட்சி நோக்கிய அரசையும் அதன் மக்களையும் இனப் படுகொலை செய்து அழித்தனர்.

எமது அரசு ஒன்றும் இரகசியமாக இயங்கியதல்ல. வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் வந்து உரையாடி விருந்துண்டு போனவர்கள். நடந்தது ஒரு பயங்கரவாத அமைப்பின் ஆட்சி என்றால் எப்படி உறவாடிப் போயினர்? இலங்கை அரசுடன் சமமாக உலகின் பல நகரங்களில் நோர்வே அர-சின் அனுசரணையுடன் பேசிய போது பயங்கரவாதிகள் எனத் தெரியவில்லையா? எனவே இவர்கள் நடத்திய போர் என்பது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும். அப்படியானால் எம்மீது தொடுத்த போர் ஒரு பிரகடனப் படுத்தாத ஒன்று என்றே கொள்ள வேண்டும்.

அமைதிப் பேச்சின் போது இலங்கை அரசு ஒப்புக் கொண்ட எந்த ஒரு கோரிக்கையும் நிறை வேற்றியது கிடையாது என்பதை இந்த நாடுகளே அறியும். உயர் பாதுகாப்பு வலையங்கள் என வீடுகளில் இருந்து விரட்டப்பட்ட பொது மக்களை மீளவும் அவர்களின் வாழ்விடங்களில் குடியேறும் வகையில் சிங்கள அரசு நிறை வேற்றவில்லை. இதுவே புலிகளின் முதன்மைக் கோரிக்கையாகவும் இருந்தது.

பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி சட்ட வி-ரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவைக் கேட்டிருந்தது. ஆனால் அவற்றை நிறவேற்றாது அரசு அதே ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்திப் பல கொலைகளைச் செய்வித்தும் அந்தப் பழி-களைப் புலிகள் மீதும் போட்டும் பேச்சில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியது. எனவே பேச்சின் மூலம் அமைதி ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லாது இராணுவ ஆக்கிரமிப்பு என்ற நோக்கம் மேலோங்கிய நிலையில் சிங்களம் இருந்துள்ளது தெளிவாகிறது.

அமைதிக்கான சுனாமிப் பேரலை இடைக்கால அனர்த்த முகாமைத்துவ அமைப்பில் புலிகளின் பங்களிப்பைத் தடுக்கும் வகையில் இலங்கை அரசின் செயற்பாட்டை இந்த வெளி உலக நாடுகள் மௌனம் காத்து மறைமுக ஆதரவு நல்கி உதவின. பேச்சுகள் தொடங்கிய போதிருந்த இராணுவச் சமநிலையைக் குலைத்து அரசு இராணுவ பலத்தைப் பெருக்கவும் புலிகளின் ஆயுத மற்றும் நிதி வளங்களைத் தடுக்கவும் அழிக்கவும் உதவின.

பேச்சு வார்த்தைகளின் நடுவி-லே அரசு ஏற்றுக் கொண்ட கோரிக்கை எதனையும் நிறைவேற்றாத நிலை-யில் புலிகளை மேலும் பலவீனப் படுத்தும்

வகையில் தமது நாடுகளில் புலிகளைப் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்த்து இறுதிப் போரிலும் இலங்கை அரசுக்கு ஆயுதம், இராணுவ ஆலொசனை, ஆளணிகளும் கொடுத்துப் பங்கு பற்றின.

இலங்கை அரசின் சாட்சிகளற்ற போருக்கு உதவும் வகையில் ஐ.நா. உட்பட அனைத்துலக அமைப்புகளையும் போர்ப் பிரதேசத்திலிருந்து வெளியேறச் செய்து ஒத்தாசை வழங்கின. நடந்தேறும் இன அழிப்பை அதன் கொடுமைகளை உலக அரசுகள் தமது செய்மதிகள் மூலம் படமாக்கி உள்ளமையானது எந்த அளவுக்கு எம் அரசும் மக்களும் அழிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந்துள்ளன என்பது தெளிவாகிறது.

மேலும் போர் முடிந்த பின்னரும் கூட இவர்கள் நடத்தி முடித்த போரினால் பாதிப்படைந்த மக்களின் நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் எந்த வித நீதியோ நிவாரணமோ வழங்க முன்வரவில்லை. ஆனால் பன்னாட்டு நிறுவனங்களும் அரசுகளும் தமிழ் மக்களின் பிரதேசங்களையும் அவற்றில் உள்ள வளங்களையும் சுரண்டுவதில் கவனமாய் இருக்கின்றன.

அவர்களின் இத்தகைய செயற்பாடு ஒன்றே போதும் எமது தேசம் எத்தனை பெறுமதி மிக்கது முக்கியமானது என நாம் அறிந்து கொள்ள. எனவே நாம் தோற்கடிக்கக் காரணமான எமது தேசத்தை மீட்டெடுப்பதன் மூலமே நாம் மீண்டும் ஒரு இனமாக எமது உயிர்வாழ்தலை உறுதிப் படுத்த முடியும். நாம் மீண்டும் எழாது விட்டால் உலகில் தமிழர் என்ற ஒரு இனம் வாழ்ந்ததற்கான பூகோள வரலாற்று ஆதாரங்களை முற்றாக உலகம் இழந்து விடும். எனவே எமது ஈழ தேசம் உலகத் தமிழ் இனத்தின் அடையாளமாகக் காப்பாற்றப்படுவது கட்டாயம் ஆகிறது (வளரும்).

## யேர்மனியில் தேசியத் தலைவர் படம் பொறித தபால் முத்திரை வெளியிடப்பட்டது!

தகவல்: யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை




தமிழர்கள் தமது தேசிய முத்திரைகளை வெளியிடுகிறார்கள் என்பதால் யேர்மனியில் மணிக்கற்கள் வியாபார நிறுவனம் (Carl Faller Institute) ஒன்று சிறிலங்காவின் மாணிக்கற்கள் படங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகள் வெளியிட்டு இலங்கை தபால் அமைச்சரிடமும் அன்பளித்தது. இதை கண்ட இலங்கை தபால் அமைச்சர், Jeevan Kumaratunga, வீரப்பேச்சு விட்டு சிறிலங்காவின் இறைமையை பாதிக்கும் வண்ணம் ஏனைய ஐரோப்பிய நாடுகளை போல் அல்லாது யேர்மன் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் முத்திரைகளை வெளியிட அனுமதி வழங்காமல் தமக்கு பெருமையை சேர்க்கும் வகையில் நடந்து கொள்வது மகிழ்ச்சி அளிக்கின்றது என்று கூறினார்.

அத்தோடு Carl Faller Institute நிறுவனத்தின் இயக்குனர் யேர்மனியில் சிறிலங்காவின் இறைமையை பாதிக்கும் வண்ணம் முத்திரைகள் வெளியீடு செய்வதற்கு எவ்வித இடமும் கிடையாது என்பதையும் உறுதியளித்தார்.

இவ் விடையம் நடந்து குறிகிய நாட்களின் பின்னரே யேர்மன் ஈழத்தமிழர்கள் தமது தேசியம் சார்ந்த முத்திரைகளை யேர்மன் தபால் அமைச்சின் அங்கீகாரத்துடன் வெளியிட்டு வைத்தார்கள்.

இதன் ஊடாக மீண்டும் சிங்கள இனவெறி அரசின் பொய்ப் பிரச்சாரம் முறியடிக்கப்பட்டது.




Bern மாநகரில்

SIVA SALON

Herren Coiffeur

Öffungszeiten:
Mo - Fr: 10:00 - 19:00
Sa: 08:30 - 17:00



ஆண்களுக்கான சிகை அலங்காரம்.

Konizstrasse 70
3008 Bern

Natel:
078 318 31 45
079 595 41 32

# Importas Cash & Carry

Subash Purity of Taste
KFL Kings
Niru BRAND
Suryaa
Maliban
Inspired by goodness...
Elakkia
PG tips
TRS ASIAS FINEST FOODS
Patak's Original
Rubicon
RENUTÉ 100% PURE CEYLON TEA

SOLO IMPORTERS & DISTRIBUTOR FOR
**SUBASH, KINGS, NIRU, SURYAA, MALIBAN, ELAKKIA AND RUBICON**

**OVER 20 YEARS LEADER IN SWISS ETHNIC MARKET**

**BIGGEST ASIAN SHOP IN ZÜRICH**

***Importas Cash & Carry***
***(80m away From Letzi Park)***
***Baslerstrasse 102***
***8048 Zürich***

***Tel: +41 43 343 03 55***
***Fax:+41 43 343 03 56***
***Email: info@importas.ch***
***Web: www.importas.ch***



# கூட்டமைப்பின் நகர்வும் தமிழர்களின் எதிர் காலமும்?

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

த. பாவலன்

கூட்டமைப்பு கூட தமிழீழத்தை கேட்பதாக ஜனாதிபதி கவலை கொண்டுள்ளார். புலிகளது மனோநிலையே தொடர்ந்தும் கூட்டமைப்பினரிடையே இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டி வருகின்றார்., ஊடக நிறுவனங்களது ஆசிரியர்களுடனான அண்மைய சந்திப்பின்போது அவர் தமது வேதனைகளை பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பிற்கு முதல் நாள் இரவு முன்னணி இணைய ஊடகமொன்றினில் வெளிவந்த பரபரப்புச் செய்தியொன்று ஊடக வட்டாரங்களிடையே விவாதங்களை உருவாக்கியிருந்தது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தன்னந்தனியே அமைச்சர் நிமாலை சந்தித்து தெரிவுக்குழுக்கான கூட்டமைப்பு பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை, கையளித்து விட்டதாக அச்செய்தி வெளிவந்திருந்தது. தன் சகபாடிகளான மாவை, சுரேஸ், மற்றும் சுமந்திரனுக்கு கூட சொல்லிக் கொள்ளாது, தனியே அவர் சந்தித்து கொண்டதாக அச்செய்தி வெளியாகியிருந்தது. முன்னரும் இவ்வாறு தன்னந்தனியே ஜனாதிபதியை சம்பந்தர் சந்தித்திருந்ததால் இதுவும் உண்மையாக இருக்கலாம் என கருதப்பட்டது.

ஆனாலும் பின்னிரவினில் அச்செய்தியை குறித்த இணையம் நீக்கிவிட்டிருந்தது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெயரினில் போலியாக தயாரிக்கப்பட்டிருந்த மின்னஞ்சல் ஊடாக முக்கிய ஊடகங்கள் சிலவற்றிற்கு இச்செய்தி அடையாளம் தெரியாத நபர்களினால் அனுப்பப்பட்டிருந்தது. குறித்த மின்னஞ்சல் முகவரியானது போலியானது என பின்னர் உறுதிப்படுத்திக் கொண்ட குறித்த பாராளுமன்ற உறுப்பினர் சந்திப்பு நடந்தது உண்மை,ஆனால் அது தெரிவுக்குழுவிற்கான பெயர் பட்டியலை கையளிப்பதற்கானதல்ல என தெரிவித்திருந்தா, அடுத்த சுற்றுப்பேச்சுக்கான முன்னேற்பாடுகள், பற்றி ஆராய்வதாகவே இச்சந்திப்பு இடம்பெற்றிருந்ததாகவும் அவர் கூறிக்கொண்டார். வளர்ந்து வரும் இளம் நாடாளுமன்ற உறுப்பினரான அவரை தலைமையிடம் போட்டுக் கொடுக்க சக நாடாளுமன்ற உறுப்பினரின் சதி முயற்சி அதுவென பின்னரே சந்தேகம் எழுந்திருந்தது.

கூட்டமைப்பு பெயர் பட்டியலை கொடுத்துவிட்டதா? இல்லையா? என்பது இன்று வரை தெரியாமலேயே உள்ளது. ஆனாலும் தெரிவுக் குழுவிற்கு பெயர் பட்டியலை சமர்ப்பிக்க மாட்டோம் என்ற கூட்டமைப்பின் சுருதி வரவர குறைந்தே வருகின்றது. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது பற்றி மூச்சு விட மறுக்கின்றனர். இன்னும் சிலரது கைத்தொலைபேசிகள் உறங்கு நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கின்றன. தெரிவுக் குழுவிற்கு பெயரைக் கொடுப்பது நன்மையளிக்குமா? தீமையளிக்குமா? என்பது பற்றி தெரியாத திரிசங்கு நிலையே பலரிடையேயும் காணப்படுகின்றது.

அண்மையில் வந்து திரும்பிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா தெரிவுக்குழுவிற்குச் செல்லுமாறு

கூட்டமைப்பினரை நிர்ப்பந்தித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தது. கூட்டமைப்பு தலைமையும், அதற்கு உடன்பட்டு விட்டதாக உள்ளிருந்தே காட்டிக்கொடுப்புகளும் நடந்தது. எல்லாவற்றையும் அந்த சில-ரா தன்னிச்சையாக தீர்மானிப்பதென்ற உட்காய்ச்சலும், ஏனைய உறுப்பினர்கள் ஒரு சிலரிடையே காணப்படுகின்றது. கறிவேப்பிலையாக தொடர்ந்தும் இருக்க முடியாதென்ற சீற்றமும் வெளிப்பட்டே இருந்தது.

ஆனால் ஜனாதிபதியோ தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு இதுவரை பெயரைத்தரவில்லை என்பதில் தொடர்ந்தும் கூறிக்கொள்வதுடன் இவ்விடயத்தினில் காட்டமாகவேயுள்ளார், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியே தெரிவுக்குழுவினை நிராகரித்து விட்டதைப்பற்றி அலட்டிக் கொள்ள அவர் தயாராக இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட அவர் தாம் உருவாக்கியருப்பதாக காண்பித்துக் கொள்ளும் தெரிவுக்குழுவினில் தமிழர்களது அங்கீகரிக்கப்பட்ட கூட்டமைப்பு இல்லாதுள்ள குழு அவர் நினைத்திருக்கும் வர்த்தக சந்தைக்கு பிரயோசனமற்றது என்பதை அவர் புரிந்தேயுள்ளார், இனப்பிரச்சினைக்கான தீர்வை கணக்கில் கொள்ள தெரிவுக்குழுவை உருவாக்கியிருப்பதாக காட்டிக் கொண்டிருக்கும் ஜனாதிபதிக்கு அதில் தமிழர் தரப்பு பங்கெடுக்காது இருந்தால் வீணாகிப்போகுமென்ற கவலை உள்ளது. பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது தான் தனித்து எதனையும் செய்ய முடியாதென அவர் திரும்பத்திரும்ப கூறிக்கொண்டேயிருந்ததார். ஆனால் சகல வல்லமையும் கொண்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என அடிக்கடி தன்னை பற்றி சொல்லிக் கொள்ளும் அவரால் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன் வைக்க மட்டும் சகலருக்கும் மதிப்பளிக்க சந்தர்ப்பம் வழங்கதயாராகியிருக்கிறார். இது காலத்தை இழுத்தடித்து எதையுமே தந்துவிடாமல் நட்டாற்றினில் கைவிடும் உத்தியை மீண்டும் அரகேற்றவே என்பதை அவரது பங்காளிகளும் கூட நன்கு புரிந்துள்ளனர்.

அதனாலேயே பலரும் தெரிவுக்குழு பற்றி அடிக்கடி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர், அழுத்தங்கள் மத்தியிலேனும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவிற்கு செல்லுமானால் தமிழ் மக்களது அறுபது வருடப்போராட்டத்தை மீண்டும் ஒரு முறை பின்தள்ளி விடுவதா-கவே அது அமைந்துவிடும். எது எவ்வாறாக இருப்பினும் இலங்கை அரசிற்கு ஒரு கல்லில் பல மாங்காய்கள் கிடைக்கப்போகின்றது என்பதே உண்மை. கூட்டமைப்பு புற அழுத்தங்களால் தெரிவுக்குழுவிற்கு பிர-திநிதிகளை வழங்காவிட்டால் தீர்விற்கு ஒத்துழைக்கவில்லை என ஆட்சியாளர்கள் ஒப்பாரி வைக்கப்போகின்றார்கள், பெயரை வழங்கினால் மீண்டும் இழுத்தடிப்புக்களை செய்து அடுத்த தேர்தல்வரை காலம் தள்ள வழியொன்று கிட்டிவிடும்.ஏற்கனவே அரசு-கூட்டமைப்பு பேச்சுக்களுக்கு ஒரு வருடம் கடந்தும் சேடம் இழுக்கும் கதை அனைவரும் அறிந்ததே.

இவற்றிற்கப்பால் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியினில் அவர்கள் எதிர்க்கிறார்கள் இவர்கள் ஒத்துழைக்கவில்லை என்று கூறி அரைகுறை தீர்வொன்றையேனும் தமிழர்கள் மீது கட்டியடித்துவிடவேண்டும் என்ற முனைப்பும் ஒரு புறம் தெரிகின்றது. 1987ம் ஆண்டினில் தமிழர்களது ஒப்புதலோ, விருப்பமோ இன்றி இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதே இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது அனைவரும் அறிந்ததே. தமிழர் தரப்பினால் நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்ட இவ்வொப்பந்தத்தை 25 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அதற்கு எவ்வாறெனினும் புத்துயிர் ஊட்டிவிட இந்திய மத்தியரசு பாடுபட்டுக்கொண்டிருக்கின்றது. ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழான

மாகாணசபை இப்போது பெரும்பாலும் வெற்று எலும்புக் கூடாகவே இருக்கின்றது,

ஏற்கனவே வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. இனிவரும் காலங்களில் அவற்றை இணைப்பது என்பது பற்றி பேசக்கூட இலங்கை அரசு தயாராக இல்லை. அதேபோன்று மாகாண சபைகளுக்கான அதிகாரங்களில் எஞ்சியிருக்க கூடிய காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிப்பேசவே வேண்டாம் என ஜனாதிபதியே இப்போது அடிக்கடி கூறிவருகின்றார். பின்னர் தன்னுடைய சொந்த இடமான அம்பாந்தோட்டைக்கும் கூட இனிவரும் காலங்களினில் செல்ல முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு உள்ளதாம். அதை அவர் இப்போது கனவினில் கூட அடிக்கடி கூறிவருகின்றார்.

ஒட்டு மொத்தத்தில் எதையுமே வழங்கி விடக்கூடாது அல்லது வழங்குவது கூட உள்ளே எதுவுமே இல்லாதவொன்றாக இருக்கவேண்டும் என்பதே தெற்கு ஆட்சியாளர்களது மனோநிலையாக இருக்கின்றது. அவசர அவசரமாக அடுத்த மார்ச் மாதம் வரும் ஐ.நா சபையின் போர்விசாரணை கண்டத்திலிருந்து இப்போதைக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும். அதற்கு தமிழர்களுடனான பிரச்சினையை தீர்க்க பேசிக் கொண்டிருப்பதாக காட்டவேண்டியிருக்கின்றது. அதற்காக எப்பாடு பட்டேனும் தெரிவுக்குழுவிற்கு புத்துயிர் ஊட்டவேண்டும். அதற்காக மிரட்டியோ அச்சுறுத்தியோ அல்லது காலில் விழுந்தோ அதை செய்து முடிக்க இந்த அரசு பாடுபட்டு கொண்டேயிருக்கின்றது.

அதற்கு எம் தரப்புக்கள் பலியாடாகப் போகின்றனவா? ஏன்பதே இப்போது அனைவர் முன்பதாகவும் உள்ள பெறுமதி வாய்ந்த கேள்வி.





# கதிர்காமரைச் சுட்டவர் யார்? சந்தேக நபர் பெயர் மாறியது ஏன்? தொடரும் வழக்கில் மர்மம்!...

அந்த நல்ல காரியத்தைச் செய்தவர் யாரோ தமிழ் தேசாபிமானிகள் எனப் பலரும் நம்புவர். ஏனென்றால் யாழ் மண்கும்பானில் ஒரு தமிழனுக்குப் பிறந்தும் தன்னை ஒரு மனிதகுல தேவன் என்ற மமதையோடு தமிழினத்தின் அழிவுக்கு ஆக வேண்டிய அனைத்தையும் செய்த இனத் துரோகி. இப்படிக் கூறுவதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதற்காக அவர் கொலையை நியாயப் படுத்த நாம் முனையவில்லை. எமது கவலை தண்டனை உண்மைக் குற்றவாளிக்கா என்பதே!

அரசியல் கொலைகளுக்கு முறையான நேர்மையான நீதி விசாரணை உலகில் எங்குமே நடந்ததாக வரலாறு கிடையாது. 1959ல் இலங்கையில் பண்டாரநாயக்கா முதலாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கென்னடி, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, அவரது மகன்கள் ராகுல் காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் கொலைகளில் விசாரணைக் குழுக்கள் நீதி மன்ற வழக்குகள் என ஆரம்பம் அட்டகாசமாகத் தொடங்கினாலும் உண்மைகளோ உண்மைக் குற்றவாளிகளோ வெளி உலகுக்குத் தெரியாத நிலையே காணப்படுகிறது.



ஏனென்றால் இந்தக் கொலைகளில் அரசுகளோ அல்லது அரசுகளின் கூலிக் கொலை காரர்களோ சம்பந்தப் பட்டிருப்பதால் உண்மைகள் வெளிவராமல் அமுக்கப்பட்டு விடுகின்றன. இதே நிலைதான் கதிர்காமரின் கொலையிலும் நிலவுவதைக் காணமுடிகிறது. இந்த வழக்கின் விசாரணை பற்றி ஜூலை 4ந் திகதி 2011 ல் வெளியான செய்திப்படி கொழும்பு உயர் நீதி மன்றத்தில் கதிர்காமர் கொலையின் முக்கிய சந்தேக நபர் ஜனநாயக மக்கள் கூட்டணியின் முன்னாள் செயலர் நடராஜா சிவராஜா நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார் என மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்ததாகக் கூறப்பட்டிருந்தது. (அரசியல் பின்னணி விளக்கம்- அகரம். 4 ஆவணி இதழில் பார்க்கலாம்)

இதே வழக்கு பற்றிய 20.01.2012 செய்தியில் கதிர்காமர் கொலையின் முக்கிய சந்தேக நபரான முத்தையா சகாயதேவன் கொழும்பு நீதிமன்றத்தில் தம்மைக் காவல் துறையினர் துன்புறுத்தி உண்மைகளை ஏற்கும்படி வற்புறுத்தினர் என நீதிபதியிடம் முறையிட்டுள்ளார். தன்னைத் துன்புறுத்தியதால் தமது காது கேட்கும் தன்மை பாதிக்கப் பட்டுவிட்டதாகவும் தம்மைத் தாக்கிய காவல் துறை அதிகாரிகளின் பெயரைக் கூறியதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது.

ஒரே வழக்கில் இரண்டு நாட்களில் இரண்டு வேறு வேறு பேர் முக்கிய சந்தேக நபர்களாம். கொலைச் சந்தேக நபரின் பெயர் மாறியது ஏன்? எப்படி?


A K M
50% 50% 50%
AKM முத்திரை பதித்த பொருட்கள் அனைத்தும்
AKM 1
மூன்று நிறுவனங்க ளிலும்
Basel str 80
6003 Luzern
Tel. 041 2405400
AKM 2
Talgut-Zentrum 7
3063 Ittigen (Bern)
Tel.031 9222318
AKM 3
Alpenstrasse 1
3072 Ostermundigen
(Bern NILAVANI)
Tel. 031 9312525
!!! மலிவு மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம் A.K.M மில் மட்டும் தான் !!!
மாபெரும் மலிவு விற்பனை அனைத்து மீன் மரக்கறி வகைகளும்
தாயகத்தில் இருந்து மிக தரமாக நேரடியாக
உங்கள் தேவை அனைத்தும் ஒரே
பொன்னி அரிசி
2Kg
AKM முத்திரை பதித்த
பொருட்கள் அனைத்தும்
A.K.M முத்திரை பதித்த
ஒரு முறை சுவைத்தால்
ஈழத்து ருசி என்றென்றும்
நாவில் ஆழமாக பதிக்கும்
SALE
SALE
இல் இருந்து இல் இருந்து

# தமிழ்க் குழுக்களுக்கு இடையே முரண்பாடுகள் இல்லை என்றால் சர்வதேச சமூகம் செவிசாய்க்கக் கூடுதல் விருப்பம் காட்டலாம்!:

**மனித உரிமை சட்டவாளர் கரேன் பார்க்கர்.**



தமிழ் மக்களின் உரிமைப் போரில் தொடக்க காலம் முதலே அக்கறையும் அனுதாபமும் கொண்டு நிறைந்த மனதோடு ஆதரவும் உழைப்பும் நல்கும் நல் இதயம் படைத்தவர். முன்னர் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பதவி வகித்த போதும் சரி பின்னர் சர்வதேச மனித உரிமைச் சட்டவாளர் பதவி ஏற்ற நிலையிலும் சரி ஈழத் தமிழர் பிரச்சினையில் தம்மை அதிகம் அர்பணித்துக் கொண்டவர். நாடு கடந்த தமிழீழ அரசின் ஆலோசனைக் குழு உறப்பினராக இருப்பவர். எனவே அவரது கருத்துக்களும் கரிசனைகளும் தமிழ் மக்களால் எதுவித ஐயப்பாடும் இன்றிக் கவனத்தில் கொள்ள வேண்டியவை. அவர் எங்கள் பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய வந்தவர் அல்ல. மக்கள் படும் துயரை நேரில் கண்டு நீதியும் நிவாரணமும் விடுதலையும் பெற உழைப்பவர்.

அவர் கனடா ரொறன்ரோ தமிழ் மிரர் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகளை அகரம் தனது வாசக நேயருக்கு தமிழாக்கம் செய்து தருகிறது. மிக அவசியமான நேர்காணலைத் தக்க தருணத்தில் எடுத்து வழங்கிய தமிழ் மிரர் எமது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரித்துடையது. இதோ அவர் வார்த்தையில் கூறிய விடயங்களில் சில:

"நான் நினைக்கிறேன் நிருபர் குழு அறிக்கை கூறியது போல், ராஜபக்ஷவின் வெற்றிப் பெருமிதம்" நாளடைவில் மறைந்து விடும், ஏனென்றால் சிங்கள மக்களும் கூட தமக்கு மதிப்பு அதிகரித்ததாக பார்க்கப் போவதில்லை. அவர்கள் வெளி உலகினால் தனிமைப் படுத்தப் படுவதைக் காணப் போகிறார்கள்.கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக் குழு எந்த விதமான சாதகமான முன்னேற்றம் நோக்கிய வழிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் சிங்கள மக்களுக்கும் கூட இல்லை.

மேலும் எனது பார்வையில், இராணுவத்திலும் மக்களிடையேயும் உள்ள பிரிவுகளை அரசு பொன்சேகாவின் பிரிவாகக் குறிவைத்து சிங்கள மக்களிடையே ஒரு பிரச்சினையை ஏற்படுத்தும் சாத்தியப்பாடு தெரிகிறது. இன்னொரு விதமாகச் சொல்வதானால், கடைசிக் கட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் அவர்கள் விசாரணைகள் வழக்குகள் போன்ற காட்சிகளை ஏற்படுத்தவும் கூடும். அவர்கள் அவற்றைக் கீழ் நிலைப் படையினர் மீது குறிப்பாக எதிர் கட்சியின் பிரிவினர்மீது சுமத்தி அதனால் பாரிய பிரிவினைகளை ஏற்படுத்தலாம்.

அடுத்த ஓரிரு வருடங்கள் இலங்கைத் தமிழருக்கும் புகலிடத் தமிழருக்கும் அதிகம் சிக்கலும் பாரிய பன்முக எதிர் வினைகளும் நிறைந்த வருங்காலமாக இருக்கும் என நினைக்கிறேன். அவற்றை எப்படி நவீனத்துவத் திறமையோடு நிலைமைகளை உண்மையோடு சரியாகக் கையாள வேண்டும் என்ற அறிவும் புகலிடத் தமிழருக்குத் தேவைப்படுகிறது.

எனவே இன்னும் ஒரு முக்கியமான சவாலை தமிழ் குழுக்கள் வெற்றி கொள்ள வேண்டி உள்ளது. நீங்கள் உலகத் தமிழர் பேரவையா? பிரித்தானியத் தமிழர் பேரவையா? அல்லது கனேடியத் தமிழர் பேரவையா? என்பது பற்றி சர்வதேச சமூகம் கவலைப் படுவதில்லை. அவர்கள் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்களா? எல்லாரும் ஒரே சேதியைச் சொல்கிறார்களா என்பதையே பார்க்க விரும்புகின்றனர். எனவே அவர்கள் அதனைக் காணும் வரை எந்த விதமான அர்த்தமுள்ள அல்லது முன்னேற்றமான நகர்வும் இருக்காது.

குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்த கொடுமைகளுக்கு ஏதாவது பழிவாங்கும் நினைவில் யாராவது இருந்தால், நிச்சயமாக என்னைப் பொறுத்த வரை, அது உணர்வு ரீதியாக மிகக் கடினமானது. அதனைத்தான் நாம் செய்யக் கூடிய ஒன்றாக இருக்கும் என்றால், நாம் எமது ஏமாற்றங்களை வெற்றி கொள்ள வேண்டிவரும். ஒருவகையில் எம்மிடம் உள்ளதோடு திருப்திப்பட வேண்டியும் இருக்கும்.

இலங்கையில் உள்ள தமிழருக்கும் புலம் பெயர் தமிழருக்கும் எதிர்காலம் கடினமாக உள்ளது என நான் நினைக்கிறேன். ஏனென்றால் ஸ்ரீலங்கா அரசு மாறவில்லை. எனவே தீவில் உள்ள தமிழர் இன்னமும் மிகக் கடுமையான நிலையில் இருப்பதோடு அவர்களுக்கான உதவிகளை எடுத்துச் செல்லும் வழியும் சர்வதேச சமூகத்துக்கு மிகவும் கடினமாக உள்ளது.

எனவே தமிழர் பிரச்சினை ஒரு கொதிநிலை விடயமாக உள்ளது. ஐ.நா. செயலரின் அறிக்கையைக் கொண்டு என்ன செய்வது?, நிபுணர்குழு அறிக்கைப் பிரகாரம் ஐ.நா.அமைப்பு விசாரணைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா? அப்படியான வேளையில் பான் கீ மூனின் நிலைப்பாடு சமரசம் காணும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தும்.

பான் கீ மூன் அறிக்கையை ஆணையாளரிடமும் மனித உரிமை சபையின் தலைவரிடமும் அனுப்பி விட்டார். அவ்வாறு செய்ததன் மூலம் அவரது மேற்பார்வையில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்கள் கடமை என அவர் நினைப்பதாகக் காணப்படுகிறது.

*சில நேரங்களில் சில குழுக்களிடம் முதலில் நீங்கள் உங்கள் சுதந்திரத்தைப் பெறவேண்டும் அதன் பின்னர் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித் தீர்மானிக்கலாம் என்று கூறியுள்ளேன். ஆனால் நீங்கள் உங்கள் சுதந்திரத்தைப் பெறும் வரை நீங்கள் 5 குழுக்களாகச் செயற்பட்டு வெவ்வேறு மாறுபட்ட வேலைத் திட்டங்களை ஐ.நா.விடம் முன்வைப்பதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு செய்வது உங்களை எங்கேயும் கொண்டு சேர்க்காது. அரசுகளும் மாறுபட்ட கருத்துகள் ஆலோசனைகள் குறித்து குழுக்களிடையே நிலவும் ஐக்கியம் அற்ற நிலையைக் காரணம் காட்டி எதுவும் செய்யாது தப்பிக்க முயல்வர்."*

*அம்மையார் கூறிய ஆணித்தரமான கருத்துகள் எமது விடுதலை முன்னெடுத்துச் செல்லும் அமைப்புகளின் செவிகளில் ஏறுமா? வாசகப் பெருமக்கள் உயிர்ப்போடு உரியவர்களை ஊக்குவிக்க அகரம் கேட்டுக் கொள்கிறது.*



# நடமாடும் மர்ம மயானம் வண்டியில் எரிக்கப்படும் மனித உடல்கள்!



உலகில் கொலைக் கலையில் பல தசாப்தங்களாக வெற்றிக் கொடி நாட்டிவரும் அமைப்பு எனில் அது இத்தாலியின் மாபியாக் கட்டமைப்பு எனலாம். அவர்கள் கடத்திக் கொலை செய்தவர்களின் சரியான எண்ணிக்கை அவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. காரணம் அவர்களால் கொல்லப் பட்டவர்களின் சடலம் கிடைப்பதில்லை. அதனால் வழக்கு விசாரணைகளும் இடம் பெறாமல் போய்விடுகிறது.

இலங்கையில் காணாமல் போனவரின் எண்ணிக்கை எவருக்காவது தெரியுமா என்றால் அதுவும் யாருக்கும் தெரியாது. ஆனால் முறைப்பாடுகள் வந்து கொண்டே இருக்கின்றன. அண்மைக் காலம் வரை கடத்திக் கொல்லப் பட்டவர்களின் சடலம் எங்காவது அடையாளம் தெரியாது முகங்கள் எரித்தும் சிதைத்தும் காணப்படும்.. அவர்களின் ஆடை போன்ற பிற பொருட்களைக் கொண்டு உறவி-னரால் அடையாளம் காணப்பட்டால் மட்டுமே அது யாருடைய சடலம் என அறியப்படும்.

காவல் துறை நீதித் துறையினரின் தவிர்க்கமுடியாத செயற்பாட்டால் அக்கொலைகளுக்கான பொறுப்பை அரசின் பக்கம் சுமத்தும் சுட்டுவிரல்கள் நீண்டு விடுகின்றன. இதனால் அரசுக்கும் அதன் சார்பில் கடத்திக் கொன்றவர்களுக்கும் பல இக்கட்டான தருணங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

இதுவரை கூலிக் கொலைகாரர்களைப் பயன்படுத்தி வந்த அரசு இப்போது தனது சிறப்புப் படை மூலம் செயற்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து விட்டதாகத் தெரிகிறது. இதன் மூலம் குறைந்த அளவில் பொய்களை வைத்தே நிறைந்த அளவு பயனை அரசு பெற்றுவிட முடியும். எனவே ஒரு உயர்தர தொழில் நுட்பத்துடன் தனது எதிர்ப்பாளர்களைச் சரி செய்யும் முறையைக் கையாண்டு வருகிறதோ என நினைக்கச் செய்கிறது. இப்போது வெளியான செய்தி அதனைத்தான் காட்டுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் சர்வதேச அரசுகளின் கவனத்தை ஈர்த்த விடையமாக மாபியா அமைப்பு எப்படிக் கொலை செய்யப் பட்டவர்களின் சடலத்தை அடையாளம் தெரியாமல் செய்து விடுகிறது என்பது இருந்தது. அதுபற்றி அகரமும் வாசகருக்கு 2011 ஆனி-ஆடி மாத இதழ் (2)ல் தெரிவித்தது.
இப்போது இலங்கையில் முதன் முறையாகக் கடத்தப் படுபவர்களின் கதி பற்றி ஒரு திடுக்கிடும் செய்தி வெ-ளியாகி உள்ளது. இன்றைய இலங்கை அரசு தனது எதிர்பாளர்களை இருந்த இடம் தெரியாமல் செய்வதில் தனித் திறமை காட்டி வருகிறது.

ஒரு நடமாடும் உடற் தகன வண்டியில் கடத்திக் கொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டு விடுகிறதாம். வெள்ளை வான் கடத்தலில் இடம் பெற்றதும் அந்த இடத்துக்கு அல்லது அதற்கு வசதியான இடத்துக்கு இந்தத் தகன வண்டி போய்ச் சேரும். அதற்குள் கடத்தப்பட்டவர் உயிருடனோ சடலமாகவோ ஏற்றப்பட்டு விடுவர்.

சடலம் எரிக்கப் பயன் படுத்தப்படும் எரி வாயு வசதிகள் கொண்ட அந்த வண்டி எட்டடிச் சடலத்தை ஒரு கையளவு சாம்பராக்கி வீசி விட்டுப் போகும். கிட்லர் இலட்சக் கணக்கில் அப்பாவி யூத மக்களைப் பெரிய வாயு வாடிகளில் கொன்று எரித்துக் கொன்ற வரலாற்றை உலகம் கண்டது. இன்று எல்லாம் மினி சைசில் பார்க்கும் எமக்கு இதுவும் ஒரு மினி விசயம்தான். மனித விசயம் என நினைத்துப் பயந்து விடாதீர்கள்.


மீண்டும் Dortmund நகரில்

புதிய அமுதசுரபி

இலங்கை இந்திய தமிழர் உணவகம்

U-Towerக்கு முன்பாக வட இந்திய, இலங்கை உணவு வகைகளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!



Mittag Buffet: Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€

Rheinische Str,20
44137 Dortmund

Tel:0231/ 91 09 89 47
Fax:0231 530 176 82



என். எஸ். ஜுவலரி
NS Jewellery & Textiles
BEST Collections!
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.
தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்.
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12 மாதம்
1200CHF. இணைய விரும்புவோர்
உங்களது பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



# என்ன கொடுமை சரவணா!...

கல்லெலி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ

சுகமாய் இருக்கிறியளே..? உங்கட புண்ணியத்துல நானும் நல்லா இருக்கிறன். தமிழரின்ர திருநாள் சனவரி மாதம் தான் எண்டுறதுல இனிமேல் எல்லாரும் உறுதியா இருக்கவேணும் கண்டியளோ. எதிர்காலத்தில எக்காரணம்கொண்டும் குழப்பங்கள் வந்திடக்கூடாது பாருங்கோ..! சித்திரை எண்டுறதெல்லாம், உருட்டிப் புரட்டின வரலாற்றுத் திரிபுகளால உண்டானதெண்டு போன மாதம் உங்களிட்ட வந்த அகரம் இதழ் ஆதாரங்களோட உங்களுக்குப் புட்டுப் புட்டு வைச்சதை எல்லாரும் வாசிச்சிருப்பியள். ஆகவே இத்தால் உங்களுக்கு அறியத்தாறது என்னவெண்டால் இனிமேல் ஆருமே குழம்பக்கூடாது எண்டுறதுதான்.

சரி இனி விசயத்துக்கு வாறன். என்னெண்டால் என்ர நீண்டநாள் கூட்டாளி ஒருத்தர் புதுவீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்தவர். எனக்கும் கொஞ்சம் விசயம் தெரியுமெண்டு என்னையும் கூப்பிட்டவர். பின்னச் சரியெண்டு, காலங்காத்தாலை நானும் தடல்புடலா வெளிக்கிட்டு அங்க போய்விட்டன். அய்யர் பத்து மணிக்குத்தான் நாள் நல்லதெண்டு சொன்னவராம் எண்டு எங்கட இனம் சனம் எல்லாம் நேரத்துக்கே அங்க கூடிவிட்டினம். ஆனால் பத்து மணியாகி-யும் ஐயரைக் காணேல்லை. என்ர கூட்டாளின்ர சம்சாரம் பதறிப்போய், வாசலுக்கோடுறதும் திரும்பி வாறதுமாய் நிக்குறா. எனக்கெண்டால் அந்தரமாய்க் கிடக்குது அவவைப் பார்க்க.

என்னடா செய்யுறது எண்டு யோசிச்சுக் கொண்டு நிக்க, ஐயரிட்ட இருந்து தொலை-பேசி வந்திச்சுது. விசயம் என்ன தெரியுமே, அவர் நேரத்தைக் கொஞ்சம் பிழையாப் பாத்திட்டாராம். பதினோரு மணிக்குத்தான் சரியான நேரமாம். "பதினஞ்சு நிமிசத்தில உங்க நிப்பன்" எண்டவர், சரியா பதினொரு மணிக்குப் பத்து நிமிசம் இருக்கேக்க வந்துசேந்தார் பாருங்கோ. வந்தவர் கடகடெண்டு கும்பத்தை அடுக்கி, சடபுடவெண்டு மந்திரம் சொல்லி, சரியா பதினொண்டு நாப்பதுக்கு அலுவல் எல்லாம் முடிச்சு வெளிக்கிட ஆயத்தம். ஐயா கொஞ்சம் இருங்கோ எண்டுட்டு என்ர கூட்டாளி என்னைக்கூப்பிட்டு, அடேயப்பா ஐயாவின்ர தட்சணைச்சாமான் எல்லாத்தையும் கொண்டுபோய் ஐயாவின்ர காரில வைச்சுவிடு எண்டான்.

சரியெண்டு நானும் எல்லாத்தையும் தூக்கிக்கொண்டு போய், ஐயாவின்ர வாகன ஓட்டுனரிட்டப் போய் பின்கதவைத் திறந்துவிடுறியளே எண்டு கேக்க அவரும் திறந்துவிட்டார். அங்க பார்த்தால், வேற எக்கச்சக்கமான தட்சிணைச் சாமா-னுகள் எல்லாம் கிடக்கு. என்ர வாய் சும்மா கிடவாதுதானே...! உதென்ன சாமானுகள் எண்டு நான் கேட்க, வாகன ஓட்டுனர் சொன்ன கதை-யைக் கேட்டியள் எண்டால், உங்களுக்குத் தலை சுத்தும் கண்டியளோ..! என்ன தெரியுமே சங்கதி..? "வேற ஒரு இடத்துல கிரகப்பிரவேசம் முடிச்சுப்போட்டுத்தான் நாங்கள் இங்க வாறம். அதுதான் கொஞ்சம் பிந்திப்போச்சுது. இப்ப இதை முடிச்சுக்கொண்டு இன்னொரு இடத்திலையும் அலுவல் இருக்குப் பாருங்கோ. அதுதான் ஐயா ஆலாய்ப்பறந்துகொண்டு திரியுறார்" எண்டார் அந்தத் தம்பி. அப்பத்தான் எனக்கு மூளையில பொறி தட்டிச்சுது. உது தானோ நல்லநேரம் ஒரு மணித்தியாலம் பின்னுக்குப்போனதின்ர இரகசியம்.

ஆகா் ஐயர் அடிச்ச ஆப்பு, இதெல்லவோ பெரிய ஆப்பு. ஆண்டவனே, அப்ப கிரகப்பிரவேசம் நடந்தது என்ன நேரத்திலையோ தெரியாது பாருங்கோ. வீட்டுக்காரர், ஐயாவின்ர சொல்லை வேதவாக்காய் மதிச்சல்லோ, பூசை புனஸ்காரம் எல்லாம் செய்தவர். நம்பிக்கை கொண்ட மனங்களில அய்யர் ஆப்பு வைக்கலாமோ..? உழைப்புக்காகச் செய்தாலும் நியாயம் காக்க வேணுமோ இல்லையோ..? "கந்தனுக்குப் பசி எடுத்தால், கந்தசட்டியை ஒரு நிமிசத்திலையும் முடிக்கலாம்" எண்டு சொல்லப்படாது. கடவுளை நம்பிச் செய்யுற காரியங்களில கரி பூசினால், அநியாயம் அடகோராமாய்த் தலைவிரிச்சாடும் கண்டியளோ...! ஊரில ஐயாமார் எண்டால் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் காட்டுறனாங்கள் எண்டு நான் சொல்லித் தெரியவேணுமே...! ஐயாமார் அந்தமரியாதையைக் குலைக்கப்படாது பாருங்கோ..!

இதைவிட இன்னும் பெரும்பகிடி எல்லாம் நடக்குதாமுங்கோ. கலியாண நாளுகளில, ஐயாமார் எல்லாரும் ஒரே ஓட்டம் தானே..! ஒரே நாளில இரண்டு, மூண்டு கலியாணத்துக்கு அழைப்பெண்டால் ஐயாமார் சிலர், மணிக்கணக்கில ஓதுற மந்திரங்களை, நொடிக்கணக்கில முடிக்கினமாம். "தட்டை மாத்து, தாலியைக்கட்டு, எடடா வண்டியை, எங்கயடா அடுத்த கலியாணம்" எண்டு ஓடுகினமாம். உதுவும் சரியில்லைப் பாருங்கோ. கலியாணம் ஆயிரங்காலத்துப் பயிர். வாழ்க்கையில ஒரு முறை செய்யுற விசேசம்.. (பலமுறை நடந்தால் ஐயரைக் கூப்பிடாயினம்) அதை, ஆற அமர இருந்து, அழகாகச் செய்து முடிச்சால் எவ்வளவு புண்ணியம் தெரியுமோ...?

எனக்கு இன்னுமொரு குடைச்சல் மனசுக்குள்ள கனநாளாய் இருக்கு. என்னெண்டால், கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையில குறுக்க ஒரு தரகர் தேவையில்லை எண்டுறது என்னுடைய வாதம். ஏனெண்டால் அந்தக்காலத்தில பாருங்கோ் சுந்தரமூர்த்தி நாயனாரில இருந்து, கண்ணப்ப நாயனார் வரைக்கும் எல்லாருமே இறைபக்தியால, தாங்களே நேரடியாக இறைவனைத்தரிசிச்சதாக புராண, இதிகாசங்கள் சொல்லுது. இறைவன் மேல அதீத ஈடுபாடு கொண்டவர்களை, ஆண்டவன் நேரடியாகவே ஆட்கொண்டருளிய கதையளையும் கேள்விப்பட்டிருக்கிறம். ஆண்டவனை நேரடியாகவே, நாங்களே வழிபட்டால் என்ன எண்டுறதுதான் என்னுடைய யோசனை. ஏனெண்டால் இஞ்ச கன கோயிலுகளில, விசேசபூசை எண்டால் நூறு யூரோ, சாதாரண பூசை எண்டால் ஐம்பது யூரோ, பஞ்சாராத்தி காட்ட பத்து யூரோ எண்டு, எங்க பாத்தாலும் எல்லாத்துக்கும் காசுதான் பாருங்கோ. அப்பிடியெண்டால், காசில்லாதவனின்ர பூசையைக் கடவுள் ஏற்கமாட்டரோ..? இல்லைத் தெரியாமத்தான் கேட்கிறன். கண்ணப்பநாயனார் தன்ர கண்ணைக் குத்தியெடுத்து ஆண்டவனுக்கு வைச்சதையும், பண்டி இறைச்சி படைச்சதையும் ஆண்டவன் ஏற்கேல்லையோ..? ஔவையாருக்கு முருகன் வந்து நாவல்பழம் போடேல்லையோ..? ஞானசம்பந்தருக்கு உமையம்மை நேரவந்து ஞானப்பால் கொடுக்கேல்லையோ..? உதுக்கெல்லாம் கடவுள் என்ன புரோக்கர் வைச்சே வந்திட்டுப்போனவர்..? தெரிஞ்சால் சொல்லுங்கோவனப்பா..! கோமணம் கட்டுற ஆண்டியாயிருந்தாலும், கோடி கோடியாக் கொட்டுற பணக்காரனாயிருந்தாலும், ஆண்டவன் எதிர்பார்க்கிறது அன்பை மட்டும்தான் பாருங்கோ, உன்போல் பிறரையும் நேசி எண்டுறதைத்தான் எல்லாமதமும் சொல்லுது.ஆனால் வெளிநாடுகளில பணக்காரனுக்குத்தான் முதல் பூசை. "அஞ்சு சதம் கையில இல்லாட்டில், ஐம்பது அடி தள்ளி நிண்டு கும்புடு" எண்டு இனிமேல் கோயிலுகளில எழுதிப்போட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை. கேட்டால் உதெல்லாம் கோயில் வளர்ச்சி நிதி எண்டுவாங்கள்...! அதுசரி, கோயில் வளரத்தான் வேணும். அதுக்கு நன்கொடை வாங்குங்கோ.. முடிஞ்சவன் எல்லாம் உதவிசெய்வான்..!

அதைவிட்டுட்டு, உப்பிடி அநியாயப் படி அளக்கக்கூடாது பாருங்கோ..!


ஒண்டுமே புரியாத சம்ஸ்கிருத பூசைக்கு, நாங்கள் எல்லாம் விளக்கம் தெரியாமலே விழுந்து விழுந்து கும்பிடுறம். அதையாவது தமிழில மாத்திச்செய்யலாமல்லே..! அதுவும் நடக்கிற மாதிரித் தெரியேல்லை. பார்ப்பம் என்ன நடக்கப்போகுது எண்டு...! ஐயாமாரே, மகாசனங்களே..! நான் யாரையும் கொலைவெறியோடு தாக்கேல்லைப் பாருங்கோ. பொறுக்க முடியாத வேதனையிலதான் எழுதுறன். தயவுசெய்து, ஐயாமாரும், கோயில்களும், எல்லாரையும் சமமா மதிக்கவேணும் எண்டுறதுதான் என்ர ஆசை. அது நடக்கும், நடக்கவேணும் எண்டு நம்பிக்கையோட காத்திருப்பம் என்ன..!

பாடிக்கொண்டே போட்டு வாறன் என்ன..!

*என் மதமா உன் மதமா*
*ஆண்டவன் எந்த மதம்*
*நல்லவங்க எம் மதமோ*
*ஆண்டவன் அந்த மதம்..!*


பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின் பெறுமதி!
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14

# சிங்கள ஆக்கிரமிப்புக்குள் தமிழர்கள்!




## திருமலை வாழ் தமிழர்களின் எதிர்கால இருப்பு தொடர்பில் எழும் கேள்விகள்...

**திருமலையிலிருந்து ஆதவன்**

பல வருடகால இடைவெளியின் பின்னர் சென்றிருந்தமையால் திருக்கோணேஸ்வரம் கோவில் பகுதியில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை காணக்கூடியதாக இருந்தது.

முன்னரெல்லாம் திருமலை சென்று பின்னர் அங்கிருந்து திருக்கோஸ்வரம் செல்வதற்காக படி ஏறும் போது ஒரு இந்துக்கோவிலுக்குச் செல்கின்றோம் என்ற பயபக்தி தானாகவே மனதுக்குள் குடிகாள்ளும். ஆனால், கடந்தவாரம் அங்கு சென்ற போது, ஒரு பௌத்த விகாரைக்குச் செல்கின்றோமா என்ற சந்தேகம் மேலெழுவதைத் தவிர்க்க முடியவில்லை. காரணம் - திழருக்கோணேஸ்வரப் பெருமானைத் தரிசிக்க சாரையாரையாகச் செல்பவர்களில் கணிசமானவர்கள் சிங்களவர்கள்.

அதுமட்டுமன்றி கோவில் வீதியை ஆக்கிரமித்து கடைபரப்பியிருப்பவர்களும் முழுமையாக சிங்களவர்கள்தான். திருமலை நகரசபையின் உத்தரவையும் மீறி அமைக்கப்பட்டுள்ள இந்தக் கடைகள் ஆக்கிரமிப்பின் மற்றொரு சின்னமாகக் காட்சியளிக்கின்றது. கிழக்கு மாகாண ஆளுநர் சிங்களவர். திருமலை அரசாங்க அதிபர் சிங்களவர். கோவில் பகுதி ஒரு இராணுவ முகாமுக்கு உட்பட்ட பகுதியாகவே உள்ளது. இந்த நிலையில் துணிச்சலாகக் கடை பரப்பியுள்ள சிங்களவர்களை அனுமதிப்பதைவிட நகர சபைக்கும் வேறு தெரிவுகள் இருந்திருக்காது.

திருக்கோணேஸ்வரம் அமைந்திருக்கும் பிரட்றிக் கோட்டைப் பகுதியை புனித நகராக்குவதற்கு இந்துமதப் பிரமுகர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இதுவே ஒரு சிங்களவர்களின் வணக்கத்தலமாக இருந்திருந்தால் கதை வேறு!

இருந்தபோதிலும் இந்தப் பகுதியைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் தமிழர்கள் அதிகளவுக்கு அக்கறையாக இருப்பதை கடந்த வாரம் இங்கு சென்றிருந்தபோது அவதானிக்க முடிந்தது. மறுபுறத்தில் இந்தப் பகுதியை முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டுவிட வேண்டும் என்பதில் சிங்களவர்களுக்குள்ள வெளியையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பின்னணியில் திருமலையைப் பொறுத்தவரையில் இனங்களுக்கிடையிலான உறவுகள் ஒரு கொதி நிலையில்தான் உள்ளன என நிச்சயமாகக் கூறலாம்.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாறு மிகவும் தொன்மையானது. இராமாயணத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய வகையில் இங்கு காணப்படும் இராணவன் வெட்டு உள்ளது. இந்த ஆலயம் எந்தளவு பழமையானது என்பதற்கு இது சான்று. இராவணனுக்கு இங்கு சிலை வைக்கப்பட்டு மக்கள் வணங்குவதையும் காணலாம்.

திருமலையின் வரலாற்றிலிருந்து திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றைப் பிரிக்க முடியாது. இந்நிய நாடுகள் பலவற்றினதும் படையெடுப்புக்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்ட திருக்கோணேஸ்வரரம் இப்போது சிங்களவர்களின் படையெடுப்பினால் தன்னுடைய சுயத்தை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளப்போகின்றது என்பதுதான் இந்துக்கள் மத்தியில் எழுகின்ற கேள்வி!



பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கைத் தீவு மீண்ட உடனடியாகவே திருமலையை சிங்கள மயமாக்குவதற்கான முயற்சிகளை சிங்க ஆட்சியாளர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். அல்லை - கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின் மூலமாக ஆரம்பமான இந்த ஆக்கிரமிப்பு இன்று திருமலை மாவட்டத்தில் தமிழர்களின் எதிர்கால இருப்பையே கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. திருமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்கள் பல சிங்கள மயமாக்கப்பட்டுள்ளதுடன், தமது பாரம்பரியமான தமிழ்ப் பெயர்களையும் இழந்து சிங்களப் பெயர்களைச் சூடிக்கொண்டிருக்கின்றன.

வளம் கொழிக்கும் சம்பூரிலிருந்து தமிழர்கள் ஒட்டுமொத்தமாக ஒரே இரவில் வெளியேற்றப்பட்டு இன்று எழு வருடங்களாகப்போகின்றது. அவர்களுடைய முகாம் வாழ்க்கைதான் இன்னும் முடிவுக்கு வரவில்லை. தாம் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இந்த சம்பூர் மக்களையிட்டு இன்று வரையில் யாரும் கவலைப்படவில்லை.

இந்தப் பின்னணியில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலைமையைப் பயன்படுத்தி திருமலை நகரப் பகுதியை சிங்கள மயமாக்கும் திட்டம் இப்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது. திருமலை நகரை அடுத்துள்ள மீன்பிடிக் கிராமங்கள் அனைத்தும் சிங்கள மயமாககப்பட்டுள்ளது. இதனால் திருமலையில் கடல்வளம் முழுமையாகவே சிங்களவர்களின் கைகளுக்குள் சென்றுவிட்டது. திருமலையிலிருந்து பெருமளவு கடலுணவுப் பொருட்கள் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றது. இதனைவிட கருவாடு உற்பத்தியும் சிங்களவர்களின் கைகளிலேயே உள்ளது.

திருமலை நகரப் பகுதியில் எந்த இடத்தில் தடுக்கிவிழுந்தாலும் முன்னால் ஒரு கோவில் இருக்கும். அந்தளவுக்கு நகரப் பகுதிகளில் இந்துக் கோவில்கள் பெருமளவுக்கு நிறைந்துள்ளன. நகரில் தமிழர்களின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பாதுகாப்பதில் இந்தக் கோவில்கள்தான் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதில் பிரதானமானதுதான் திருக்கோணேஸ்வரம் கோவில்! இதனை முறியடிப்பதற்காகத்தான் திருமலை நகரின் மத்தியில் புத்தர் சிலை ஒன்று இரவோடிரவாக அமைக்கப்பட்டு அதற்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இதனைவிட திருமலை நெல்சன் தியேட்டரின் முன்பாக உள்ள பாரிய காணியும் பத்த விகாரை ஒன்றை அமைப்பதற்காக சிங்களவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காணியில் நான்கு அரச மரங்கள் இருப்பதைக் காரணங்காட்டியே இதனை சிங்களவர்கள் இப்போது கைப்பற்றியிருக்கின்றார்கள்.

அரச மரங்களே இன்று தமிழர்களுக்கு எதிரியாகிவிட்ட நிலை!

திருக்கோணேஸ்வரம் கோவில் பகுதிக்குச் செல்லும் போது கதிர்காமத்தைப் போன்றதொரு நிலை இதற்கும் ஏற்பட்டுவிடுமா என்றே அஞ்சத் தோன்றுகின்றது. பிரெட்றிக் கோட்டைக்குள் திருக்கோணேஸ்வரம் இருப்பதால் முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு திருக்கோவிலாகவே இது உள்ளது. இந்த நிலையில் திருக்ணோஸேவரத்துக்கு முன்பாக பாரிய புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. இதற்குப் போட்டியாக பாரிய அளவிலான சிவபெருமான் விக்கிரகம் ஒன்றை தமிழர்கள் கோணேஸ்வரம் கோவிலின் முன்பாக அமைத்திருக்கின்றார்கள். இது சிங்களத் தரப்பினருக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தாலும் அமைதியாக இருக்கின்றார்கள்.

திருமலையைப் பொறுத்தவரையில் அங்கு அமைதி போன்ற நிலை காணப்பட்டாலும், இனங்களுக்கிடையில் கொதிநிலைதான் காணப்படுகின்து.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in

# Lycamobile

## ஐக்கிய ராஜ்ஜியம்

இங்கிலாந்தில் இருந்து உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்களை மேற்கொள்ள மிக மலிவான கட்டணத்தில் உலகத் தரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே தொலைபேசி லைக்காமொபைல்

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 1p /min | 19p /min |
| இலங்கை | 7p /min | 10p /min |
| இந்தியா | 1p /min | 1p /min |
| மலேசியா | 1p /min | 5p /min |



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| நெதர்லாந்து | 5p /min | 19p /min |
| அமெரிக்கா | 5p /min | 5p /min |
| கனடா | 5p /min | 5p /min |
| சுவிட்சர்லாந்து | 5p /min | 20p /min |

தற்பொழுது உங்கள் Lycamobile லை மீள்நிரப்பும்பொழுது லைக்காமொபைலில் இருந்து Lycamobile லுக்கு இலவசமான குறுந்தகவல் சேவையும் இலவச அழைப்புக்களும் வழங்கப்படுகிறது.

£5 ⇨ இலவச அழைப்பு 100 நிமிடம் அல்லது 100 குறுந்தகவல் [SMS]
£10 ⇨ இலவச அழைப்பு 250 நிமிடம் அல்லது 250 குறுந்தகவல் [SMS]
£20 ⇨ இலவச அழைப்பு 500 நிமிடம் அல்லது 500 குறுந்தகவல் [SMS]
£30 ⇨ இலவச அழைப்பு 2000 நிமிடம் அல்லது 2000 குறுந்தகவல் [SMS]

## லைக்காவின் தரம் நம்மையெல்லாம் லைக்க வைக்கும் தரம்.

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.co.uk 0207 132 0322**

அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் விசேட விலைக்கழிவு நேரங்களிலும் மற்றும் மாதத்தில் இரண்டு மீள்நிரப்புதலுக்கும் மட்டுமே பொருந்தும் மீள்நிரப்பிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால்லைக்காமொபைல் ப்ளஸின் வழமையான கட்டணமான ஒவ்வொரு அழைப்புக்கும் 7p கும் குறுந்தகவலுக்கு 9p கும் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

top-up Sainsbury's TESCO POST OFFICE PayPoint payzone epay Wilkinson Currys phones 4u MORRISONS Aleef Budgens Costcutter

# எங்கே காவலன்?



இரா. அருணாச்சலம்

"அய்யா வணக்கம்!". "அட யேர்மன் தம்பியே- வாருங்கோ!" "அய்யா சுகமா இருக்குரிங்களே?" "சுகத்திற்கு என்ன குறை தம்பி! நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று திருப்தி பட்டால் சுகம் தானாக வரும். ஏதாவது ஒரு வகையிலாவது திருப்தி அடையவில்லை என்றால் -எமது வாழ்கை அர்த்தம் இல்லாமல் ஆகிவிடும். அது செரி தம்பிக்கு எப்பிடீ வன்னி வெயில் ஒத்து வருதே? வேளிநாட்டில சுகமா வாழ்ந்த உங்களுக்கு இங்க கடினமாகத்தானே இருக்கும். "என்ன கஷ்டமையா? உங்களப்போல சிலரோட பழகிறத்துக்கு கிடைச்ச சந்தர்ப்பமே எவ்வளவு மன நிம்மதியும் திருப்தியுமாக இருக்குது. அதனால வெயில் வெக்கை ஒன்றும் பெரிசாக தெரியவில்லை. சரி அய்யா எவ்வளவோ தொழில்கள் ஒவ்வொருவரும் ஆரம்பிக்கைக்க "நீங்க மட்டும் ஏன் செருப்பு தைக்கிற தொழிலை தெரிவு செய்து கச்டப்பர்ரிங்க. இதில வார வருமானம் உங்கட வாழ்க்கை செலவுக்கு போதுமானதா?" அதை ஏன் கேக்குர அப்பு. முந்தி மாதிரி பத்தாயிரம் இருவதாயிரத்தோட தொழில் செய்யிர காலம் போய்ற்ரு. இப்ப எல்லாம் லட்சகணக்காய் தேவைப்படுது அதற்கு நானெங்கு போரது?.... இந்த தொழில்ல கூடி அரவாசி பேர் கடன்தான் சொல்லி போராங்கள்!" "கடனா அது கூட குடுக்குரிங்களா?" "அது ஏன் தம்பி கேக்குர. திருப்பி கேட்டா முறைக்குராங்க! – "ஆர் அந்த வாடிக்கையாளர்?" - "வேர யாருமில்லை இந்த ஆமிக்காரர் தான் . என்ன பகுடியெண்டா தம்பி - யனாதிபதி ராசபக்ச சொல்லுரேர் ஒரு நாளைக்கு ராணுவத்துக்கு இருவத்தியஞ்சு மில்லியனாம் இங்க என்னவெண்டா அறுந்த செருப்போட திரியுராங்க - அது மட்டுமா? அண்டைக்கு ஒருவன் கொண்டுவந்தான் இடது காலுக்கு வேரையும் வலது காலுக்கும் வேரையுமாக. என்ன முள்ளிவாய்க்காலில் பொருக்கினியே என்று கேட்டன் - விளங்கவில்லை போல அவனுக்கு ஏதோ தனக்குள்ள முணுமுணுத்துக்கொணடு போனான்." அய்யா உங்களொட கதைச்சுக்கொண்டு இருக்கிரத்தில நேரம் போரதே தெரியவில்ல.

அது சரி அய்யா இங்கதான் நிவாரணம் என்று சொல்லி அள்ளி அள்ளி குடுக்கிராங்களாம் நீங்க எடுக்கவில்லையோ? "அது ஏன் கேட்கிற அப்பு – நானும் ஒரு நாள் போனன் .. கலைச்சு விட்டுட்டாங்க!" – 'கலைச்சு விட்டுட்டாங்களா? ஏன் அப்படி?"- "அந்த கேம்ப்பில இருக்கேக்கில உண்மையை சொன்னன்... எனக்கு இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டி இருக்கிராங்க என்று அதை பதிஞ்சு வைச்சிருக்கிராங்களாக்கும் .. அதனால எனக்கு நிவாரண உதவி இல்லையாம்!" – அப்படி


என்றால் உங்கட பிள்ளைகள் உங்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார்களா?" – "ஓம் அப்பன் மூண்டு வருடத்துக்கு ஒருக்கா கடிதம் போட்டிருந்தாங்க அதற்கு பிறகு ஒரு தொடர்புமில்லை! முள்ளிவாய்க்காலில் நான் செத்து போய்ரன் என்று விட்டுட்டாங்களாக்கும். தம்பி அது மட்டும்மல்ல இங்க நிவாரணம் என்ற பெயரில மக்களை சோம்பேரிகளாக்கி ..தமிழரையும் வறுமைக்கோட்டுக்குக்கீழை தள்ளுகிறார்கள். இது இந்த மக்களுக்கு புரியுதில்லை. அதுகளும் அவர்கள் குடுக்கிரதை வாங்கிவாங்கி அண்டைக்கண்டே செலவு செய்து விட்டு கொட்டிலுக்குள்ளையும் பாலத்துக்குக் கீழையும் வாழுதுகள். ஒரு நிரந்திரமான வாழ்க்கையை தேடக் கூடிய நலை-



மையில் யாரும் இல்லை. இன்னும் கூறப் போனால் உங்களப்போல புலம்பெயர்ந்த மக்கள் ஊர்வலங்கள் -உண்ணாவிரதங்கள் என்று செய்து மேல் நாட்டவர்களிற்கு குடுக்கிர அழுத்தங்களால தான் ஓரளவுக்காவது எங்கள விட்டுவைச்சிருக்கிராங்க". "என்னையா இப்படி சொல்லுரிங்க. எங்களாலத்தான் இங்க உள்ளவர்களுக்கு இன்னமும் கசடம் என்கிராங்க!" – "அப்படித்தான் ஒரு சிலர் கூறினம். அதுயில்லை உண்மை! வவுனியா கேம்ப்பில கொண்டு போய் மக்கள் எல்லாரையும் பட்டினியாலயும் தொற்றுநோயாலையும் பதிவு என்கிற பெயரில அழைச்சுக் கொண்டு போயும் அழிக்கிறத்துக்கோ எவ்வளவு முயற்ச்சி செய்தவங்கள் இதெல்லாம் தெரிஞ்சு கொண்ட புலம்பெயர் மக்கள் இந்த அனியாயங்களிலிருந்து எங்களை காப்பாதிரத்திற்கு அவர்கள் எவளவு முயற்ச்சிகள் செய்தார்கள். அந்த செயற்பாட்டாலத்தான் ஓரளவாவது எங்கள விட்டுவச்சிருக்காங்க. அந்த கச்டத்துக்கு வெளிய வந்தாப்பிறகு தான் பெடியல பெற்றி யோசிக்கினம்." – "எனக்கும் ஒண்றும் விளங்கவில்லை அய்யா.ஏன் பெடியங்களை பெற்றி யோசிக்கினம்?" - தம்பி . பெடியங்களை பெற்றி கதைககணும் எனறால் கவனமா கதைக்க வேணும். புக்கத்தில நிக்கிரு மரத்திற்கு கூட காதுகள் இருக்கு." – "சரி சொல்லுங்கோ அய்யா!".

"ஏதோ உன்னப் பார்தால் அந்த பிள்ளைகள் போல இருக்கு. அதுதான் சொல்லுரன். எவ்வளவுதான் அந்க பிள்ளைகள் பேசினாலும் அப்ப இருந்த நிம்மதியும் சந்தோசமும் பாதுகாப்பும் இப்ப இல்லை அப்பு. அதை நெல்லா மக்கள் உணர்திருக்கிராங்கள். இப்ப எல்லாம் பொதுபட்டால் போதும் விடியும் வரை சிவராத்திரிதான். தூக்கமற்ற வாழ்க்கை "துயரம் நிரைந்த நாட்களாகவே முடியுது. வயதுக்கு வந்த பிள்ளைகள் வீட்டில இருந்தயால் அவர்களிற்கு எப்போதும் ஆபத்து காத்துக்கொண்டேயிருக்கும். எப்ப வருவார்கள் என்ன செய்வார்கள் என்று யாருக்கும் தெரியாது . அப்படி யேதாவது நடந்தாலும் வாய் மூடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். இப்படி கொடுமையான வாழ்கிறார்கள். எங்களுக்கு என்ன நடந்தாலும் கேட்க யாரும் இல்லை. அண்டைக்கு காவலரண்கள் இருந்தன- நமக்கு காவலும் இருந்தது. நினைச்சுப் பார்த்தால் கண்ணீர்தான் வருகிரது. என்ன செய்ரதையா? போனதெல்லாம் திரும்பி வந்திருமா." அய்யா கவலைப்படாதிங்கோ. புலம்பெயர் மக்கள் உங்களுக்காகத்தான் பல செயற்பாட்டனுக்குள் இறங்கியிருக்கிறார்கள். உலகம் கைவிட்டாலும் நாம் உங்களை கைவிட மாட்டோம். அய்யா இது உறுதி. மீண்டும் ஒரு முறை வன்னிக்கு வந்தால் உங்களை சந்திப்பேன். உங்களை சந்தித்தில் மிக்க மகிழ்ச்சி. போய் வருகிறேன்!




# சண்டே லீடர் அடி பணிந்து விட்டது!

கடந்த சில வருடங்களாக இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகளில் புரட்சி ஏற்படுத்தி வந்த சண்டே லீடர் மகிந்த அரசின் பல தில்லு முல்லுகளை வெளிப்படுத்திப் பிரபலம் பெற்றது. தமிழின அழிப்புப் போரை அதன் நியாயப் பாட்டை நேர்மையான விமர்சனம் செய்யாமல் அரசின் போர்த்தளபாடக் கொள்வனவில் இடம் பெற்ற இலஞ்சம் ஊழல் என்பவற்றைப் பரபரப்புச் செய்திகளாக்கிப் பணமும் புகழும் தேடி வளர்ந்த பத்திரிகைதான் சண்டே லீடர்.

இந்த விளையாட்டில் இக்பால் அத்தாஸ் அடைந்த புகழும் வெற்றியும் முடிவில் அவரை நாட்டை விட்டே ஓடச் செய்தது. தொடர்ந்து போராடிய லசந்த விக்கிரமசிங்கா நடு வீதியில் வைத்து அலுவலகம் போகும் போது அவரது காரில் வைத்தே ஒரு மோட்டார் சைக்கிள் தாக்குதல் தாரியின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார். இது மகிந்த கூட்டத்தை எதிர்க்கும் எவருக்கும் உயிர் வாழும் உரிமை கிடையாது என்பதை உலகுக்கு விடுத்த பகிரங்க அறிவித்தலாகும்.

ஆயினும் அவரது இடத்துக்கு வந்த பிரெட்றிக்கா ஜான்ஸ் என்ற பெண்மணி தனது எழுத்து வன்மையைக் காட்டியே வந்தார். சரத் பொன்சேகாவிடம் எடுத்த நேர்காணலில் வெள்ளைக் கொடியோடு வந்த புலிகளை மேலிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே சுட்டுக் கொள்ளப்பட்டனர் எனக் கூறினார் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆதனைப் பின்னர் சரத் அவ்வாறு கூறவில்லை எனத் தப்பிக்க முனைந்தபோதும் ஜான்ஸ் உறுதியாக சரத் அவ்வாறு கூறினார் என்றே சாதித்தார்.

சரத்தை உள்ளே தள்ள வழக்கில் முக்கிய சாட்சியாக இருக்க வேண்டிய பிரெட்றிக்கா ஜான்ஸ் கொலைப் பயமுறுத்தல் என நாட்டை விட்டு ஓடிப்போன நிலையில் சரத் ஒருதலைப் பட்சமாகச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுத் தொடர்ந்தும் சிறையில் இருக்கிறார்.

சண்டே லீடருக்கு எதிராக மான நட்ட வழக்குகளாலும், விற்பனைச் சரிவாலும் நிதி நெருக்கடியில் சிக்கியது. அதனை மகிந்தர் தனது கையாட்கள் மூலமாக விலை பேசி வந்த நிலையில் இப்போது கொழும்பு பங்குச் சந்தை கில்லாடியான அசங்க செனவிரத்ன என்பவர் மூலம் வாங்கிவிட்டார். அதுவும் அவரது சொந்தப் பணத்தில் அல்ல. மகிந்தரின் தலையீட்டால் வட்டி இல்லாத அரச வங்கிக் கடன் பெற்று வாங்கி உள்ளார்.



# புதிய சூரியக் குடும்பங்களும் கிரகங்களும்!

அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் அன்றாடம் பிரபஞ்சத்தில் உள்ள சூரியக் குடும்பங்களையும் கிரகங்களையும் தனது நவீன அதி சக்திவாய்ந்த தொலை நோக்கிகள் மூலம் கண்டு பட்டியலிட்டு வருகின்றது.

இதுவரை எமது சூரியக் குடும்பம் போன்ற 11 சூரியக் குடும்பங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர். இப்படி அறியப்பட்ட புதிய சூரியக் குடும்பங்களுடன் கிரகங்களின் எண்ணிக்கை 729 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 2300 கிரகங்கள் பற்றிய தொடக்க நிலை ஆய்வுகள் மேலதிக ஆய்வுகளுக்கும் உறுதிப் படுத்தலுக்கும் உள்ளாகி உள்ளது என்கின்றனர். இவை பூமியை விட ஒன்றரை மடங்கு முதல் 5 மடங்கு வரை பெரியவையாக உள்ளன. இவை வாயு வடிவிலா அல்லது கற்கள் மண் கொண்டு பூமியைப் போன்று உள்ளனவா என்பதைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர்.

மிக நவீன தொலைநோக்கியான கெப்லர் இப்பொழுது சிக்னா, லீறா என்ற இரு நட்சத்திரத் தொகுதிகளில் உள்ள 150,000 சூரியன்களை அவதானித்து வருகிறது. இப்பொழுது கிரகங்களைத் தேடுவதை விடக் கிரகக் குடும்பங்கள் பற்றியே நாம் சிந்திக்கத் தொடங்கிவிட்டோம் என்கிறார் ஒரு வானியல் விஞ்ஞானி. நவக்கிரகம் என்பது இன்று சோதிடத்துக்கு மட்டுமே முக்கியம் மற்றப்படி அறிவியலில் இவை இலட்சம் கோடிகளில் ஒன்று எனலாமோ?






# அச்சுவேலி



சென்ற இதழின் தொடர்ச்சி...

வண்ணை தெய்வம்

அச்சுவேலியை செம்மண் பூமி என்றுதான் சொல்வார்கள். அச்சுவேலியைச் சேர்ந்த அனேகமாக மக்கள் இந்த செம்மண்ணையே தெய்வமாகக் கருதி விவசாயம் செய்பவர்கள். அத்துடன் உப உணவு வகைகளான குரக்கன், சாமை, இராசவெள்ளி, மரவெள்ளி, வெங்காயம் போன்றவை அதிகமாக பயிரிடப்பட்டாலும் இந்த மண்ணில் வயல் நிலங்களே அதிகம். காலப்போக்கில் வெளிநாட்டுப் பழவகையான கொடி முந்திரி வளர்ப்பால் தோட்ட வெளியெங்கும் குலை குலையாக முந்திப்பழங்கள் தொங்கும் அழகான காட்சியையும் அச்சுவேலியில் காணக்கூடியாதக இருந்தது. அதுமாத்திரமல்ல நீர்வளமும் நிறைந்த மண அச்சுவேலி! அச்சுவேலியில் உள்ள கிணறுகள் அனைத்தும் ஆழமற்றவையே!

கால முன்னேற்றத்தில் தானிங்கி இயந்திரங்களால் தோட்டங்களுக்கு நீர் இறைத்தாலும் அன்றைய காலத்தில் தோட்டக் கிணறுகளில் துலாக்கள் அமைத்து இருவர் துலாவில் முன் பின் செல்ல மற்றொருவர் துலாக்கொடியில் பெரிய பட்டை கட்டி தண்ணீரை இறைக்க, இன்னுமோருவர் வரப்புகளில் வரும் நீரை வாத்திகளுக்குள் வழிமறித்துவிட், இப்படியாக நாலுபேர் சேர்ந்து தண்ணீர் இறைத்துப் பயிர் செய்வார்கள். அதன் பின்னர் சூத்திரம் (சூத்திரக்கிணறு) என்னும் இயந்திரத்தினால் தண்ணீர் இறைத்தார்கள். இது எப்படியாதென்றால் சங்கிலித் தொடராக கிணற்றில் இருந்து வாளிகளுடன் தண்ணீர் மேலே வரும் முறையில் சூத்திரத்தை அடைத்திருப்பார்கள். இரண்டு மாடுகள் அந்த சூத்திரத்தின் இணைப்புடன் கணற்றைச் சுற்றி சுற்றிவர அந்த மாடுகளின் பின்னே ஒருவர் சென்றுகொண்டே இருப்பார்.இன்னொருவர் வரப்பில் நின்று பாத்தி கட்டுவார். இந்த சூத்திரக்கிணறு முறையால் இரண்டு பேருடனேயே அவர்களால் நீர் இறைக்க்கூடியதாக இருந்தது. இவையெல்லாம் படிப்பதன் மூலமே தெரிந்து கொள்ளலாம் பார்ப்பதற்கு அரும்காட்சியகத்தில்க்கூட இருக்குமோ தெரியாது. இப்படியான சிறப்புக்களையெல்லாம் கொண்டது அச்சுவேலி நகரம்.

அச்சுவேலிக்கு இன்னுமோர் சிறப்புமுண்டு! அது 1974ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட "கைத்தொழில்ப்பேட்டை". யாழ் மாவட்டத்தில் அமைந்த ஒரேயொரு கைத்தொழில்ப்பேட்டை அதுவேயாகும். 26 தொழில்க்கூடத்துடனும், இராட்சத தண்ணீர்த்தாங்கியுடனும் ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்பேட்டையை அப்பொழுது தமிழரசுக்கட்சியின் சார்பாக பாரளமன்ற உறுப்பினராக இருந்த காலம்சென்ற திரு. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோல தனிநபருக்குச் சொந்தமான "லாசோப்" என்ற சவர்க்காரத் தொழிற்சாலையும் அச்சுவேலியிலேயே அமைந்திருந்தது.

HMH
Asianshop
&
Trinkhalle
குறைந்த விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்
Heinrich Gustav Str. 82
Bochum Werne
Germany
Tel.: 0234 52 84 783



அச்சுவேலியில் இருந்து ஒண்டரைக் கிலோ மீட்டர் துரத்தில் ஒரு அதிசயக் கிணறு இருக்கின்றது அதன் பெயர் "நிலாவரை". எத்தனையோ வெளிநாட்டவர்கள் வந்து ஆராட்சி செய்தும் இந்தக் கிணற்றின் ஆழத்தை எவராலும்அறிய முடியவில்லை என்பது பெரும் ஆச்சரியமான விடயமாகும். அதுமாத்திரமல்ல அந்த கிணற்றுக்குள் போடும் பொருட்கள் கீரிமலைக் கடலுக்குள் மிதப்பதாகவும் பலரும் பேசிக்கொள்கின்றார்கள்! நிலாவரைக்கும் கீரிமலைக் கடலுக்கும் உள்ள இடைவெளித்துாரம் எட்டு மைல்தான்.

இறைக்க இறைக்க வற்றாத இந்த நிலாவரைக் கிணற்றில் பலர் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் உண்டு. இதனால் இந்தக் கிணற்றில் ஒரு குறிப்பிட்ட ஆழத்தின் கீழே சங்கிலி வலை அமைக்கப்பட்டிருந்தும் குறிப்பிடத்தக்கதாகும்.

அச்சுவேலி மண்ணில் வாழ்வாங்கு வாழ்த பெரியோர்களையும் நாம் மறந்துவிட முடியாது. அவர்களில் முக்கியமானவர்கள் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், சேர். சிற்றம்பலம் ஏப்பரகாம் காடினர், அந்தக் காலத்திலேயே செவாலியர் பட்டம்பெற்ற அருளானந்தம், புலவர் தம்பிமுத்து, (இவர் ஆங்கிலக் கவிதை எழுதுவதில் தங்கப்பதக்கம் பெற்றவர்) ஆகியோர். இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் கணபதிப்பிள்ளை இயற்பெயர்கொண்ட வில்லிசை மன்னன் சின்னமணி அவர்களும் அச்சுவேலி மண்ணின் மைந்தரே.

அச்சுவேலி மக்கள் தெய்வ வழிபாட்டில் அதிக நம்பிக்கை உடையவர்கள். அங்குள்ள ஆலயங்களில் மாறி மாறி ஒலிக்கும் அந்த மணி ஓசைகளின் இன்ப நாதம் இயற்கையாகவே தெய்வ பக்தியை ஏற்படுத்தும்! அச்சுவேலியின் வட திசையில் உயர்ந்த கோபுரத்துடன் அமைந்திருக்கின்றது உலவிக்குளம் பிள்ளையார் கோவில். அந்த கோவிலுக்கு அண்மையில் சிவசக்தி கோவிலும் உண்டு. இது ஒரு சிறிய கோவிலாகும். உலவிக்களம் பிள்ளையார் கோவிலின் குருக்கள் பலராலும் மதிக்கப்பட்ட குமாரசாமிக் குருக்கள் ஆவார். அவரது மறைவிற்குப் பின்னர் அவ் ஆலயம் அலரது பிள்ளைகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியில் மகிழ மரங்கள் சூழ வயிரவர் கோவில் ஒன்று உண்டு. இதை மகிழடி வயிரவர் கோவில் என்று சொல்வார்கள். அச்சுவேலியிலுள்ள பத்தமேனியிலும் பல கோவில்கள் இருக்கின்றன. 1960க்கு முன்னர் பத்தமேனியில் உள்ள கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களில் சின்னமேள நடனங்களாலும், வாண வேடிக்கைகளாலும் ஊரெ களைகட்டும்.

கிறிஸ்த்தவ மக்களின் வழிபாட்டிற்காக புரட்ஸ் சார்ந்த தேவாலயம் ஒன்று அச்சுவேலிச் சந்திக்கு அருகாமையிலும், மற்றும் இஸ்பிரீத்துசாந்து தேவாலயம், அமெரிக்கன் மிசன் தேவாலயம், சூசையப்பர் தேவாலயம் என கிறிஸ்த்தவ தேவலாயங்களும் நிறைவே இருக்கின்றது.

இப்படியாக அளவற்ற சிறப்புகள் நிறைந்த அச்சுவேலியில் இன்று நான் இக் கட்டுரையில் குறிப்பிட்டது போல அழகுடனும் செழிப்புடனும் இல்லை! காரணம் அச்சுவேலிக்கு அண்மையில் உள்ள பலாலி ராணுவ முகாமே! இன்று அச்சுவேலிக்குச் செல்பவர்கள் இக் கட்டுரையில் குறிப்பிட்ட பல கட்டிடங்களையும், தோப்புக்களையும் தேடி அலையவேண்டியிருக்கும்.

*பிந்திய செய்தி: தற்பொழுது உருக்குலைந்து கிடக்கும் அச்சுவேலி கைத்தொழில்ப் பேட்டையை இன்னும் இரண்டு மாதத்திற்குள் புனரமைத்து செயற்பட வைக்கப்போவதாகவும், முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்படும் இத் தொழில் மையத்திதால் 6000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும். தொடர்ந்து இரண்டாம் கட்டமாக இத் தொழில் மையம் மேலும் 67 ஏக்கர் நிலப்பரப்பில் விஸ்த்தரிக்கப்படும் என்றும் தற்பொழுது இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.*






# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
தரமான இலங்கை, இந்திய, மற்றும் ஆபிரிக்கா உணவுப்
பொருட்களைச் சிரமம்மின்றி ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

**Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de**

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப
நீங்கள் வீட்டில் இருந்தபடியே எம்மிடம்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்!

**Tel: 0231 45 96 17 / 28**

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr




ETR
எட்டாவது ஆண்டில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
24மணி நேர
வானொலிச் சேவை
நிகழ்ச்சிகளுக்கான
தொலைபேசி இலக்கங்கள்:
Germany: 02381 97 25 560
Swiss: 044 508 7210
France: 01 70 90 10 44
England: 020 70 43 10 55
Ca, Toronto: 416 900 36 53
Ca, Montreal: 514 228 37 52
Hotbird 13° - Freq: 11.200 (V) - S/R: 27500 - Fec: 5/6
www.etr.fm
Tel.: 00 49 (0) 23 81 95 66 09 - Fax: 00 49 (0) 23 81 97 25 556 - eMail: info@etr.fm

706950

# Lycamobile

# ஜெர்மனி

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

மலேசியா
இந்தியா

வீட்டு தொலைபேசி + கைத் தொலைபேசி
1ct /min

Lycamobile இல் இருந்து Lycamobile க்கு
இலவச அழைப்புக்கள்

இலங்கை

வீட்டு தொலைபேசி 1ct /min
கைத் தொலைபேசி 12ct /min



கனடா
அமெரிக்கா
1ct /min

ஐரோப்பா
1ct /min இல் இருந்து

* வெளி நாடு இணைப்புக்கட்டணம் ct 19
இச் சலுகை 29/02/2012 வரை செல்லுபடியாகும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்கட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.de

www.lycamobile.de 069 33399-322

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Westfalen AG · Agip · JET · AVIA · ICP COMPANIES · LOTTO Sachsen-Anhalt · LOTTO Baden-Württemberg · LOTTO SAARTOTO · LOTTO Hessen · LOTTO Thüringen